59

ஸ்ரீ பர்வதவர்த்தனி

ஆசிரியர் : V. M. நடேச நாட்டார்

59/4-17

மலர் 2	ஹேவிளம்பி புரட்டாசி திங்கள் செப்டம்பர் 1957	இதழ் 1

OFFICE OF THE REGISTRAR
5 - OCT 1957
MADRAS

	பொருளடக்கம்	பக்கம்
1.	முதலாண்டு பணி ...	1
2.	சங்க அறிக்கை ...	4
3.	உண்மையான பக்தர் யார்? ...	7
4.	அன்பின் அவசியம் ...	9
5.	பாவையும் கிளியும் ...	10
6.	கடமையும் காதலும் ...	12
7.	வைத்தியம் ...	18
8.	யார் பெற்ற செல்வம் ...	20
9.	இளங்குமரி ...	23
10.	தேசிங்கு ராஜன் ...	27

சென்னை ராஜ்ய
வதராஜகுல சங்க
மாத வெளியீடு

விலை அணா 4

JL
m211, N56SP
N57.2-1.
(8)266

உ

பராசக்தி துணை

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

பர்வதவர்த்தனி

"எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".

மலர் 2	ஹேவிளம்பி புரட்டாசித் திங்கள் செப்டம்பர் 1957	இதழ் 1

முதலாண்டுப் பணி

தெய்வத் திருவருளால் நமது மீனவர் சமுதாயத்தின் நலன் ஒன்றனையே குறிக்கோளாகக் கொண்டு கடந்த பன்னிரண்டு திங்களாகப் பணியாற்றிவரும் நமது பர்வதவர்த்தனி மாத இதழுக்கு நம்மவர் பலர் சென்ற வெள்ளி விழாவில்தந்த வாக்குறுதிக்கிணங்கவும், சங்கத்தின் செயல்களை அவ்வப்பொழுது வெளியிடுவதற்குப் பத்திரிகை மிக அவசியமெனப் பலர் வேண்டுகோளுக் கிணங்கியும் நம் ஒவ்வொருவரது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள ஒரு சாதனம்-பத்திரிகை இல்லையே என்று ஏங்கிக் கிடந்தவர்களுக்கு இன்பம் நல்கும் முறையில் நமது வர்த்தனி தம் கருத்துக்களை வையத்திற்கு முழங்கத் தொடங்கியது. நம்மைப் பற்றிக் கவலைப்படாது வாழ்ந்தவர்களெல்லாம் நம்மைப் பற்றிச் சிந்திக்கவும், தம்முடைய நியாயமான கோரிக்கைகளை ஆராயவும் தலைப்பட்டனர். வீறுகொண்டு வாழ்ந்திருந்த அந்தக் காலத்திய பழம்புகழை மீட்கும் பணியில் வர்த்தனி ஓரளவுக்கு வெற்றி பெற்றதென்றே கூறுதல் வேண்டும், இதுகாலை, நம்மினத்தவரிடையே உண்டாகியிருக்கும் எழுச்சியை—விழிப்புணர்ச்சியை நாம் சாதாரணமாக மதிப்பிட்டுவிட முடியாது. அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் பொறுப்பு நம்மை நடாத்திச் செல்லும் நங்குலத் தலைவர்களையே சாரும். இந்த நல்வாய்ப்பை நாம் பயனுடையதாக்கிக் கொள்ளாது விடுவோமானால், நம்முடைய எதிர்காலம் நமது கணிப்பில் அமைய முடியாது—அமையாது.

சமூகத்தவரின் நல்லாதரவும் சமூகப் பெருமக்களின் நல்லாசியுமே பத்திரிகை தொடர்ந்து நடைபெறுவதற்குத் துணையாகும். அவையின்றேல் விளைவு வேறு வகையதாக ஆகியிருக்கும். இதற்கு முன்புதோன்றி நம் சமூகத்திற்காகத் தொண்டாற்றிய பத்திரிகைகளுக்கெல்லாம் கிடைக்காத பேராதரவு நம் வர்த்தனிக்குக் கிடைத்

சென்ற ஆண்டு சந்தா அனுப்பாதவர்கள் இரண்டு ஆண்டுகட்கும் சந்தாவாக ரூ 6/- அனுப்பிவைக்க வேண்டுமென்றும், சென்ற ஆண்டு சந்தா அனுப்பியவர்கள் இந்த ஆண்டுக்குரிய சந்தா ரூ 3/- உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகின்றனம். எல்லாம் வல்ல பார்வதவர்த்தனி நமக்கு அருள் பாலிப்பாராக. (ஆசிரியர்)

——(o)——

சங்க அறிக்கை

சென்ற ஆண்டு நிகழ்ந்தவைகளையும் இவ்வாண்டு நிகழ வேண்டியவைகளையும் ஒரு சிறிது சுருக்கமாகச் சொல்ல விரும்புகின்றோம்.

சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நமது சங்கத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடினோம் — மாநாடு நடத்தினோம் — கனம் மந்திரிமார்களையும்—பிரமுகர்களையும் வருவித்து நமது குறைகளைச் சொன்னோம். நம்மைக் கவனிப்பதாகவும் வேண்டிய நன்மைகளைச் செய்வதாகவும் மனமகிழப் பேசி மகிழ்வித்தார்கள். தீர்மானங்கள் பல நிறைவேற்றி அனுப்பினோம். வழக்கம்போல் திருப்பப் பட்டன.

அவ்வமயம் மீன் இலாக்கா அமைச்சராயிருந்த கனம். பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள் ஜினிவா சென்று திரும்பிய பின்னர் சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்கத்தின் சார்பாக ஓர் தேநீர் விருந்து நடத்தினோம். அப்போதும் நமது குறைகளை முறையிட்டோம். பின்னர் பருவதவர்த்தனியும் ஆரம்பிக்கப் பட்டது. அரசியலார்க்கும், மீன் இலாக்கா அதிகாரிகளுக்கும் நம்முடைய அபிப்பிராயங்களை ஒவ்வொரு இதழிலும் வெளியிட்டுக் கொண்டே வந்தோம். கடைசியாகப் பொதுத் தேர்தல் வந்தது. மந்திரிமார்கள் தாங்கள் ஜெயிப்பதற்கு வழி என்ன என்பதைக் கண்டு பிடிப்பதில் முனைந்தார்கள். ஒவ்வொரு ஊரிலும் மைனாரிட்டிகளாயுள்ள நம்மவர்களின் குறைகளைப் பற்றியோ, முன்னேற்றத்தைப் பற்றியோ அக்கறை கொண்டவர்களாகக் காணப் படாமல் நம்மினத்தவர்களை அவ்வக்கிராமங்களில் மெஜாரிட்டியாகவுள்ள மற்ற இனத்தவர்களுக்கு அடிமைப்படுத்தும் நல்ல கைங்கர்யத்தில் கூட்டுறவு சங்கத்தின் நலனையும் யோசியாமல் 40 ஆண்டுகளாய் வழக்கமாக 5 வருட சராசரிக்கு மீனவர் சொசைட்டிகளுக்கு மீன் குத்தகை தரும் உத்தரவை ரத்துசெய்து பகிரங்க ஏலத்தில் விடவேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளார்கள். இதன்பொருட்டு எவ்வளவோ சிரமப்பட்டும், மாநாடு கூட்டி வற்புறுத்தியும் இன்னும் அவ்வுத்தரவு ரத்துசெய்யப் படவில்லை.

பல ஆண்டுகளாக நாம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதன் பயனாகப் பருவதராஜகுலப் பிள்ளைகள் பள்ளியில் ஹரிஜனப்

பிள்ளைகளைப்போல் சம்பளமின்றிப் படிக்கலாம் என்ற உத்தரவு அரசியலாரால் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மீன் தொழில் வள ஆலோசனைக் குழுவில் அதிகாரசார்புற்ற அறுவர் நியமிக்கப் பட்டுள்ளனர். அவ்வறுவரில் நம் இனத்தவர் இருவர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

தவிர, 26-வது ராஜ்ய மாநாடு சென்னை மெமோரியல் ஹாலில் 15—6—1957 ஞாயிறு அன்று நடைபெற்றபோது நம்மால் நிறைவேற்றப்பட்டு அரசியலார்க்கு அனுப்பப்பட்ட தீர் மானங்களுள் ஒன்றுக்கேனும் சாதகமான பதிலைக்காணோம். மீன் தொழில் வள ஆலோசனைக் குழுவின் முதற்கூட்டம் 24—8—57 நடைபெற்றபோது நமது முக்கிய ஜீவாதாரமான பிரச்சினையாகிய குத்தகைதரும் விஷயம் நமது மெம்பர்கள் கேட்டிருந்தும் வரவே இல்லை. அதுபற்றி அக்டோபர் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்றும் தெரிகிறது. எவ்வளவோ வற்புறுத்தியும் அரசாங்கத் தார்க்கு எது முக்கியம் எது முக்கியம் இல்லை என்று தெரியவில்லை. அந்த உத்தரவினால் எத்துணை லக்ஷக்கணக்கான மக்கள் பிழைப் பில்லாமல் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை அரசாங்கம் உண ராமலில்லை. தெரிந்தும் வாய்மூடி மௌனமாகத்தான் உள்ளார் கள். அதன் கருத்துத்தான் விளங்கவில்லை. சென்னை அசெம்பிளி யில் இதைக் குறித்த கேள்விகள் வந்தபோது அமைச்சர் கனம். பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள் கூறிய பதில் எல்லோரையும் வியப்படையச் செய்கிறது. அரசாங்கம் 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்ற பழமொழியை ஞாபகப்படுத்துகிறது. நம்பிக்கையில்லாத ஓர் இலாக்காவை அரசாங்கம் சோறுபோட்டு வளர்த்து வருகிறதென்று சொன்னால் அது மிகையாகாது.

மீன் இலாக்காவின்மீது நம்பிக்கை இல்லையா? கோவாப ரேடிவ் சொசைட்டிகளை மேற்பார்வையிடும் இலாக்காவின் மீது நம்பிக்கை இல்லையா? மீனவர் சொசைட்டிக்குத்தான் தணிக்கை யாளர்களும், மேற்பார்வை அதிகாரிகளும் இப்படிச் செய்கிறார் களா? மற்ற எல்லாவிதமான சொசைட்டிகளுமே இப்படித் தான் நடைபெறுகிறதா? இதில் எது உண்மை? ஒரு பக்கத்தில் கூட்டுறவு இயக்கங்களை ஆதரித்து அதன் மூலமாகவே நாட்டு முன்னேற்றத்துக்கு வழி கோல வேண்டும் என்ற பிரச்சாரம். இன்னொரு பக்கம் மீனவர் சொசைட்டியில் நம்பிக்கையின்மையால் அதனை வளரவிடக்கூடாதென்ற அடக்குமுறை. இது எந்த நியா யத்தில் சேர்ந்தது என்றுதான் தெரியவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்குச் சொல்லவேண்டியவைகள் எவ்வள வோ உண்டு. அவைகளைப் பிறிதொரு சமயம் சொல்ல விரும்பு கின்றமையால் இத்துடன் நிறுத்துகின்றோம்.

என்னதான் வாயற்ற பூச்சிகளாயிருந்தாலும் உள்நாட்டு மீனவர்களைக் கவனியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. வரும் அக்டோபர் மாதத்தில் ஆலோசனை போர்டு கூட்டத்தில் என்ன

நடக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் நமது வாழ்வுப் பிரச்சனைகள் அடங்கி இருக்கிறது.

24—8—1957 மாலை 6 மணிக்கு மாடர்ன் கேப் மாடியில் மீன் தொழில் வள ஆலோசனை போர்டு மெம்பர்களுக்குத் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

இனி நாம் செய்யவேண்டியது என்ன என்பதைப் பற்றியும் ஒரு சிறிது சொல்லவேண்டியிருக்கிறது. சென்ற 12 இதழ்களிலும் என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறதென்பதை ஒரு முறை படித்து ஞாபகத்தில் வைத்துக்கொண்டோமானால் அவைகளைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கு அதிகம் இல்லை என்பது தெரிய வரும். நாம் பல வழிகளில் பணத்தை விரயம் செய்கின்றோமே யொழிய பயனுள்ள வழியில் செலவு செய்வதில்லை. நமது சங்கத்துக்குள் ஒரு கட்டுப்பாடும் ஒழுங்கும் நிரந்தரமாக இருந்தால்தான் நாம் ஏதாவது சிறிது பயனடைந்தவர்களாகக் காணப்படுவோம். அப்படி யில்லாவிட்டால் பயனடைந்தாலும் பணச் செலவு நம்மைவிட்டு நீங்காது என்பதைத் திட்டமாய் அறியவேண்டும். நாம் செய்யவேண்டிய காரியங்களோ பல இருக்கின்றன. விசேஷங் கூட்டங்களுக்கோ, கமிட்டிக் கூட்டங்களுக்கோ, மாநாட்டுக்கோ யாரும் பெரும்பாலும் வருவது இல்லை. ஏராளமாகத் தபால் செலவும் அச்சுச் செலவும் ஆகிறதுதான் மிச்சம். ஏதாவது நன்கொடையாக அனுப்பும்படிக் கேட்டாலும் சங்கமும் கொடுப்பதில்லை, சொசைட்டியும் கொடுப்பதில்லை, வெளியூர் மெம்பர்களும் பெரும்பாலும் கொடுப்பதில்லை. அந்தந்த ஊரிலுள்ள பெரியவர்கள் ஒவ்வொரு மெம்பரிடத்திலும் 4 அணா சந்தா வாங்கி அனுப்பினாலும் ஆயிரக்கணக்கில் சேர்ந்துவிடும். அதையும் செய்வது கிடையாது. தலைவர்கள் ஆண்டுக்கு ஒரு ரூபாய் கமிட்டி மெம்பர் சந்தாக் கொடுத்தாலும் வருடத்திற்கு 100 ரூபாய் சேரும். அதையும் கொடுப்பதுகிடையாது. கிளைச் சங்கங்களை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 கொடுத்து தலைமைச் சங்கத்தோடு இணைக்கவேண்டுமென்றால் அதையும் செய்வதுகிடையாது. கலியாண காலங்களில் நன்கொடை வசூலித்து அனுப்புங்கள் என்றால் அதையும் கவனிப்பார் கிடையாது. 'கைக்காசும் குறையக்கூடாது மக்கள் தொப்பையும் வாடக்கூடாது' என்ற பழமொழிப்படி இருக்கிறது இவைகள். செய்யவேண்டிய வேலைகளை யார் செய்வது? எப்படிச் செய்வது? யாரைப்போய் அதிகாரம் செய்வது? என்பதை நினைத்துப் பார்ப்பதே கிடையாது. ஏதோ எங்கோ ஒரு சக்தி மயக்கம்போட்டு விழுந்துவிடாமல் கொஞ்சம் கண் திறந்துபார்த்து இயங்கிக்கொண்டிருக்கிறது. அதையும் கூடிய சீக்கிரம் அழியவிடாமல் ஆதரிக்க வேண்டியது சமூக மக்களின் கடமை என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை என நம்புகின்றோம்.

———

"உண்மையான பக்தர் யார்?"

(திரு. நா. சோமுன், உயர்நிலைப்பள்ளி, இடைப்பாடி.)

நாம் எதற்காக இம்மண்ணுலகில் பிறந்தோம்? என்று சிந்தியுங்கள். மரணமென்பது உலகத்தில் எல்லோருக்கும் உரித்தானது. அதைப்பற்றி சிந்தனையோ, வருத்தமோ கொள்வது அறிவுடைமை ஆகாது. அது எந்த சமயத்திலும், யாரிடத்திலும் அதன் அதிகாரத்தைச் செலுத்திவிடும். அதனுல் தளர்வடையாமல் விட்டுச் சென்றவர்கள் வேலையைத் தொடர்ந்து தொண்டாற்றுவதுதான் சிறந்த அறிஞர்களுக்கு அழகாகும். தத்தமக்குள்ள அறிவிற்கும், ஆற்றலுக்கும், ஆண்மைக்கும் தக்கவாறு கூடுமான வரையிலும் துன்பப்படுபவர்களிடம் கருணைகாட்டி எவ்வகையிலும் தனித்த முறையிலும், சகோதரக் கூட்டுறவுத் தன்மையிலும் துன்பங்களை அகற்றக் கூடுமோ அவைகளைத்தான் பகுத்தறிவு படைத்துள்ள மனிதவர்க்கத்தார்கள் செய்யவேண்டிய முக்கிய கடமை ஆகும். இத்தகைய பொருளைப்பற்றித்தான் உலகம் போற்றும் உத்தமர் காந்தி அடிகள் உண்மையான பக்தர் யார்? என்பதற்கு கீழ்கண்டவற்றை அழகாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்.

1. எவர் பிறருடைய துக்கத்தை அறிந்து அவருக்கு உபகாரம் செய்கிருரோ அவரே உண்மையான பக்தர்.

2. அப்படி உபகாரம் செய்யும்பொழுது எவர் மனதில் கர்வம் கொள்ளாது செய்கிருரோ அவரே உண்மையான பக்தர்.

3. எவர் உலகில் வாழும் எல்லோரையும் வணங்குவாரோ எவர் யாரையும் நிந்திக்கமாட்டாரோ அவரே உண்மையான பக்தர்.

4. எவர் தனது மனம் வாக்குக் காயங்களைத் தூய நெறியினின்றும் சற்றும் சரியாமல் பாதுகாத்து வருவாரோ அவரே உண்மையான பக்தர்.

5. எவர் எல்லோரையும் சமமாகப் பார்ப்பாரோ அவரே உண்மையான பக்தர்.

6. எவர் ஆசையை ஒழித்தவரோ, எவர் பரஸ்திரீயைத் தன் தாயாகவே அறிந்தவரோ, எவர் தன் நாவால் ஒருபோதும் பொய் பேச மாட்டாரோ அவரே உண்மையான பக்தர்.

7. எவனை மோகமும், மாயையும் அண்டாதோ, எவருடைய மனதில் திடவைராக்கியம் கொண்டிருக்குமோ அவரே உண்மையான பக்தர்.

8. எவர் லோபமும், கபடமும் இல்லாதவரோ, எவர் காமத்தையும் கோபத்தையும் விட்டொழித்திருப்பவரோ அப்பேர்பட்டவரே உண்மையான பக்தர்.

இத்தகைய பொன்மொழிக்கு நிகரான உபதேசமும், மூல மந்திரமும் வேறு ஏது? ஆகவே எவர் உண்மையான பக்தர் என்று நீங்களே சற்று அமைதியான நேரத்தில் சிந்தித்துப் பாருங்கள்.

---(o)---

நன் கொடை.

சென்னைராஜ்ய பருவதராஜகுல சங்கத்தின் போஷகரும் சென்னைநகர பருவதராஜகுல சங்கத்தின் ஆலோசகருமாகிய உயர் திரு. கா. பொன்னுசாமி நாட்டார் அவர்கள் குமாரன் திருவளர் செல்வன் சண்முகத்திற்கும் ஆம்பூர் S. A. சுப்பராய நாட்டார் குமாரி திருவளர்ச்செல்வி சுசீலாவுக்கும் 5-9-1957 ஆம்பூரில் நடைபெற்ற திருமணத்தின்போது உயர்திரு. கா. பொன்னுசாமி நாட்டார் அவர்கள் சங்கத்திற்கு நன்கொடையளித்த ரூ 15/- உயர்திரு. S. A. சுப்பராய நாட்டார் அவர்கள் சங்கத்திற்கு நன் கொடையளித்த ரூ 10/-. மணமக்கள் நீடு வாழ்க!

* * * *

கருங்குழி க. வேங்கப்ப நாட்டார் குமாரி திருவளர்செல்வி சிவகாமிக்கும் செஞ்சி தாண்டவராய நாட்டார் குமாரன் திரு வளர்செல்வன் வேங்கப்பனுக்கும் 6-9-57 செஞ்சியில் திருமணம் நடைபெற்றபோது மணமக்களின் பெற்றோர்களால் சங்கத்திற்கு நன்கொடையளித்த ரூ 5/-. மணமக்கள் நீடு வாழ்க!

* * * *

நன்றி அறிவித்தல்.

எனது குமாரன் K. P. சண்முகத்திற்கு 5-9-57-ல் நடைபெற்ற திருமணத்தின்போது எங்கள் பொருட்டு நேரில் வந்து வாழ்த்தியருளிய பெரியார்களுக்கும், வாழ்த்துரை வாசித்தளித்த அன்பர்களுக்கும், வாழ்த்துச்செய்தி அனுப்பியுள்ள பெரியார்களுக்கும் தனித்தனியே நன்றி செலுத்த முடியாமைக்காக இதன் மூலம் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

அன்பன்,
கா. பொன்னுசாமி நாட்டார்,
காப்பிக்கொட்டை வியாபாரம், சென்னை.

அன்பின் அவசியம்

(வே. ந. ஷண்முகசுந்தரம், சென்னை-2)

தன்னைப்போன்ற மன்னுயிர்கள் மீதும், மக்கள் மீதும், இயற்கைகள் மீதும், செயற்கைகள் மீதும் ஏற்படுகின்ற பற்றும் அவைகளின்மேல் காட்டப்படும் இரக்கமும் தான் அன்பெனப்படுவது. மனிதவர்க்கமோ அல்லது உயிருள்ள எந்த ஜீவன்களோ இன்புற்று இன்ப வாழ்க்கை நடத்தவேண்டுமாயின் அன்பு அவசியம் தேவைப்படுகிறது.

அன்பின்றேல் இன்பமிராது, துன்பம் பல தோன்றும், தொல்லைகள் பல வந்துசேரும். ஆகையால் தான் அன்று முதல் இன்றுவரை உலகத்தின் பல பாகங்களிலே கருணையும், அன்பும் நிறைந்த பல பெரியோர்கள் தோன்றி அன்பைப்பற்றி அவ்வப்போது நாட்டில் பேசியும் ஏட்டில் தீட்டியும் வந்துள்ளனர். உலகில் பெரும்பாலுமுள்ள நாடுகளில் மக்கள் அநாகரிகமாக மனிதத் தன்மையற்று, நீதி, நெறி இன்னதென்பதை யறியாது வாழ்ந்துவந்த நாட்களில் ஒரு பகுதியில்மட்டும் அன்போடு, அறத்தோடு, நேர்மையோடு வாழ்ந்துவந்தார்கள் என்றால் அது இந்திய நாட்டில் தான் என்று நிச்சயமாகக் கூறமுடியும். அதற்குப் பல ஆதாரங்களும் உண்மைகளும் உண்டு. அதிலும் இந்திய நாட்டின் தென் பகுதியாகிய தமிழ் நாட்டில் தான் அறமும், அன்பும் தவழ்ந்தது. அதற்கு உறைவிடமாகவும் இருந்ததென்று அறிஞர்கள் பலர் அறிவிக்கின்றனர்; நூலாசிரியர்கள் எடுத்துரைக்கின்றனர். தமிழகத்தில் தான் வள்ளுவர் தோன்றினார். அவர் அன்பைப்பற்றி என்ன கூறினார் என்று நோக்குங்கால்,

"அன்பிலா ரெல்லாந் தமக்குடைய ரன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு"

இதன் பொருள் என்னவெனில்: அன்பு இல்லாதார் எல்லாப் பொருள்களையும் தமக்குச் சொந்தமாகக் கருதுவர்; அன்புடையார் பொருளேயன்றித் தம் உடம்பிற்குச் சாதகமாகும் எலும்பினையும் பிறர்க்கு உரியதாக நினைப்பர். பொதுவாக இதன் கருத்து அன்பு எண்ணம் இல்லாதார் அறம்செய விரும்பமாட்டார்கள் என்பதே. இவர்க்குப்பின் கருணைக்கடலாம்—அன்பின் உருவம்—அறிவின் சிகரம்—வள்ளளார் இராமலிங்கம் தோன்றினார். அன்பைப் பற்றி அவர் கூறுவதாவது; அன்பே கடவுள், அன்பே சத்தியம், அன்பே அறிவு, அன்பே ஒழுக்கம், அன்பே நீதி, அன்பே ஒளி, அன்பே அனைத்தும் என்று கூறினர். மேலும் அன்பிற்கு என்னென்ன செய்யமுடியும் என்று விளக்குகிறார். அன்பிற்கு எல்லையற்ற சக்திஉண்டு. அன்பு எங்கு நிலவி உள்ளதோ அவ்விடத்தில் கொடுமை இராது. கருணைகாட்டும் உள்ளம் பெருகும்; ஒற்றுமை உண்டாகும்; தூய எண்ணம் பிறக்கும்; ஆன்மா சுத்தமடையும்; அறம் வளரும்; ஆன்மா சுத்தமானல் அறிவு வளரும்,

தன்னைப்போன்றே பிறரையும் நினைக்கும். சாதிவெறி, சமயவெறி, மதவெறி அகலும். காணும் பொருள்கள் மீதெல்லாம் அன்பு வெள்ளம் ஊற்றெடுத்து ஓடும். அன்பினால் ஏற்படுகின்ற சக்தி என்றும் அழியா. அவை ஏட்டில் இடம்பெறும். அன்பினால் தான் பெரும் காரியத்தையும் சாதிக்கமுடியும் இதனாலன்றே!

அன்பெனும் பிடியுள் அகப்படும்
மலையே . . . ., ... என்று

கூறியுள்ளார் வள்ளலார். இம்மாதிரியே தான் உலகப் பெரியார்கள் ஏசுகிருஸ்து, கௌதம புத்தர், சாக்கரடீஸ் நம்மிடையே வாழ்ந்த காந்தியடிகள் இன்னும் பல பெரியோர்களும் அன்பைப்பற்றி அவ்வப்போது விளக்கிவந்துள்ளனர். மதவெறி மலிந்துவிட்டது. ஜாதியின் பெயரால் சண்டையிடுதல், கள்ள வாணிபம்செய்து கொள்ளை லாபம் பெருதல், முதலாளிகள் தொழிளாளர்களைத் துன்புறுத்தல், அதிகாரத்திற்கு மக்களை அடிமையாக்குதல், பட்டத்திற்குப் பணிதல், பணத்திற்குத் தலை குனிதல் முதலியனவும்; படித்தவன்-பாமரன், ஆண்டான்-அடிமை, உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற வித்தியாசங்களும் இன்று நாட்டில் குவிந்துகிடக்கின்றன. இத்தீய செயல்களைத் தகர்த்தெறிய வேண்டும். இன்றேல் நாட்டில் அமைதி இராது; அன்பு நிலவாது. இவைகளை நாட்டைவிட்டு விரட்டப்பட வேண்டுமென்றால் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் அன்பு வழி. அன்பின் துணையால்தான் இத்திய செயல்களை அகற்றமுடியும்.

வளர்க அன்பு! பெருகுக அறம்!!

——(o)——

பாவையும் கிளியும்

"தென் குமரன்"

அந்த நாள்! ஆம்; எனக்கு நன்முக நினைவிருக்கிறது! நிலவு வந்த வேளை; என் மகளோடு அந்தச் சோலையிலே பேசிக்கொண்டிருந்தான் ஒரு காளை. நானும் ஒரு தாய்தானே! பெண் என்ற நினைவு மாறி, தாய் என்ற நினைவு ஓங்கி நின்றது என் எண்ணத்தில். என் வயிறு பற்றி எரிந்தது! பின் இருக்காதா? வயதுவந்த என் மகளோடு ஒரு ஆடவன் பேசுவதா? நான் மூடிமறைத்தாலும், ஊர் வாய் மூடுமா?

"அன்பே! இந்த அகில உலகத்தைச் சுற்றி வரலாம்வா. கூவும் குயில்; தாவும் புள்ளிமான்; துள்ளும் வெள்ளிமீன்; அசைந்தாடும் தென்றல்; அதற்கொப்ப ஆடும் மயில்! காற்றிலேறி, விண்ணைச்சாடி உலகத்தின் இந்த விந்தைகளைப் பார்த்து மகிழலாம்; வா, கண்ணே! வா!"

இப்படி அந்த ஆடவன் அன்று என் மகளிடம் மயக்குமொழி பேசினான்; என் மகள் கள்ளுண்ட மந்திபோல மயங்கி நின்றிருந்

தாள்! என் உள்ளத்திற் படர்ந்திருந்த கோபம் கைகளிற் படற, மகளின் கன்னத்திலறைந்து, வீட்டிற்கு அழைத்துவந்தேன்.

அதுமுதல் என் திருமகள் பேசாச் சிலையானாள்; எந்நேரமும் சிந்தனையில் ஆழ்ந்தாள்!

ஒரு நாள். வீட்டின் ஒரு அறைக்குள் தொடுவாரற்றுக் கிடந்த பாவைகளை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந் தாள் என் மகள். பக்கத்தில் அவளால் ஆசையோடு வளர்க்கப் பட்ட பைங்கிளி அவளுடைய விளையாட்டைப் பார்த்துக்கொண் டிருந்தது. நான் அவள் பக்கம் சென்றபோது, "அம்மா! இது என் பாவை. சின்ன வயதிலே என் சிந்தையைக் கவர்ந்த விளை யாட்டுப் பொம்மை இது. நான் பேசியதை அப்படியே பேசி எனக்கு மகிழ்வுதந்த பசுங்கிளி இது!" என்று சிறிய வயதில் அவளுக்கேற்பட்ட அனுபவத்தை எடுத்துச் சொன்னாள். நான் அவளை மெய்ம்மறந்து அணைத்து நின்றேன். அவளும் என்னை அணைத்தணைத்து முத்தமிட்டாள்! நான் மெய்ம்மறந்தேன்!

இரவு வந்தது. என் மகளின் களவுக்கு உதவிசெய்ய! ஆம்; அந்த இரவுதான் என் மகள் தன் காதலனோடு ஓடிவிட்டாள்! என் மகள்! முந்திய நாள் அவள் என்னிடம் கொஞ்சியதெல்லாம் நாடகக் காட்சிபோல் என் மனக்கண்முன் தோன்றித் தோன்றி என்னை அழவைக்கிறது. தாய்ப் பாசத்தை மறந்துவிட்டு, என் தூய அன்பை மறந்துவிட்டு, புதியவனின் அன்பை நம்பி ஓடிவிட் டாள் என் மகள்! அய்யகோ என்பெற்ற வயிறுபற்றி எரிகிறதே!

அதோ, யாரும் தொடுவாரற்று இருக்கும் பாவைகள். பேசிப் பேசி மகிழ்வித்த கிள்ளை இப்போது பேசாது, ஊமையாய்ச் செவி டாய், எதையோ பறிகொடுத்தாற்போல் இருக்கிறது பாருங்கள்! இன்பம், துன்பம்-இவற்றின் எல்லைதானே அமைதி! என் வீட்டி லும் துன்பம்—அதனால் ஏற்பட்டிருக்கும் அமைதி; என் மகள் என்னைத் தனியளாக்கி ஓடிவிட்ட காரணத்தால்!

என் இதய வேதனை அதிகமாகிறதே, இந்தப் பாவைகளையும் கிளியையும் பார்க்குந்தோறும் பழைய நினைவு.........'இதுவென் பாவை! இதுவென் பாவை!' என்று சிறிய வயதிலே என் சிங் காரச் சிட்டு என்னிடம் கூறிய மொழிகள்; இவை என் சிந்தை யில் வந்து வேதனையை அதிகமாக்குகின்றன! அம்மவோ, நான் என் செய்வேன்? எப்படி வாழ்வேன்?

"இதுவென் பாவை; பாவை இதுவென்
அலமரும் நோக்கின் அலம்வருசுடர்—நுதற்
பைங்கிளி எடுத்த பைங்கிளி என்றிவை
காண்டொறும் காண்டொறும் கலங்க
நீங்கின ளோஎன் பூங்க ணோளே".—ஐங்குறுநூறு

——(o)——

கடமையும் காதலும்

(புலிசை - திரு. மொ. நாராயணன்)

களம் 1

இடம் :—அரண்மனையின் ஒரு பகுதி

காலம் :—இரவு

இருப்போர் :—பிரதாப், மனோகர்.

[பிரதாப் படுக்கைக்கு உறங்கச்செல்லும் சமயம், அவன் ஆத்ம நண்பன் மனோகர் வருகிறான். பிரதாபின் வீரத்தைப் பரிசோதிக்க விரும்பிய மனோகர் கதவின் ஒரு பக்கமாக ஒளிந்து கொள்ளுகிறான். அந்நிமலைக் கண்ட பிரதாப்.]

பிரதாப் :—யாரங்கே ?

மனோகர் :—(மௌனம்)

பிர :—(அழுத்தமாக) யார் அங்கே ? ஹூம் !

மனோ :—(மௌனம்)

பிர :—நான் கேட்கும் வினாக்களுக்குப் பதில் வரவில்லையேல் நீ மேலுலகம் அடைவது திண்ணம். ஏது ! கோழைத்தனம் நெஞ்சை குத்துகிறதோ ? ஏ திறை மறைவில் நிற்கும் தரித்திரப் பிண்டமே! ஏன் அங்கு நின்று என் வீரத்தைப் பரிசோதிக்கிறாய் ? நீ இந்த அரண்மனையின் பதினோராவது நபராகக் கொலை படப் போகிறாயா ? சொல். நீ சொல்லமாட்டாய் ? உனக்கு வலிமை ஏது ? வீரம் ஏது ? நீ புகலாவிடில் நானே உன்னைப் புகலவைக்கிறேன். இதோ பார் ! (என்று கத்தியால் குத்துதல்.)

மனோ :—அஹ்......ஹஹ்......ஹ......ஹா. நண்பா நான் யார் என்பதை நீ அறிந்தால், இவ்வளவு தூரம் பேசியிருக்கமாட்டாய். இந்த உருவத்தினிடம் உன் வீரத்தைக் காட்டினால் அது பலனற்றதாகும். நேருக்கு நேர் சமர் புரிவோம். நண்பா ! அதில் யாவர் வெற்றிபடைவரோ அவரே இந்நாட்டின் குடியேற்றத்திற்கு மறுமலர்ச்சி.

பிர :—நண்பா ! நானும் முதலிலேயே நேர்முகமாகச் சமர் புரிவோம் என்றுசொல்ல மறந்துவிட்டேன். நீயே எனக்கு ஞாபகம் ஊட்டினாய். உன் குணத்தை மெச்சுகிறேன் நண்பா. ஆனால் ஒன்று; இவ்வளவும்கூறி, உன்னிடத்தில் சமர்புரியாமல் சென்று விடுவேன் என்றுமட்டும் எண்ணாதே. ஹூம் திரையைவிட்டு வெளியேவா. உன் வாளை உருவிக்கொள்.

[மனேகர் ஒரு கருப்புத் துணியால் முகத்தை முடிக்கொண்டு வெளியே வருகிருன். பிரதாபும், மனேகரும் சண்டை செய்கின்றனர். இருவரும் நெருங்குகின்றனர். அப் பொழுது பிரதாப் மனேகரின் முகத்தில் மூடியுள்ள துணியை லாவகமாக எடுக்கிருன். பின்பு இருவரும் ஆச்சரியத்துடன் கட்டியணைத்துக் கொள்ளுகிருர்கள்.]

பிர :—(ஆச்சரியத்துடன்) ஆ! மனேகர்!

மனே :—ஆம் நண்பா! மனேகர் திரையின் மறைவில் நின் றிருந்த ஓர் கரிய உருவம். அப்படித்தானே?

பிர :—அப்படியெல்லாம் ஒன்றுமில்லை மனேகர். அமர்ந்து பேசலாம் வா?

(இருவரும் அமர்தல்)

மனே :—ஆமாம் நண்பா! சற்று நேரத்திற்குமுன் திரையின் மறைவில் நின்றிருந்த என்னுடன் பதினேழாவது நபராகக் கொலைபடப் போகிருய் என்று சொன்னுயே. அதன் உண்மை யாது?

பிர:-சொல்லுகிறேன் கேள் மனேகர் அந்தச் சோகக்கதையை. பதினைந்து வருடங்களுக்குமுன் இந்த நகரமே ஒரு பெரும் சிறப்பு வாய்ந்த இடமாக இருந்தது. அதை அழித்துவிட்டான் ஒரு மாபாவி; கல் நெஞ்சம்கொண்ட காதகன். இந்நகரத்திற்கே தீ வைத்துவிட்டான் மனேகர், தீ வைத்துவிட்டான்.

மனே :—என்ன ஆச்சரியம் தீ வைத்துவிட்டானு? இந் நகரத்தின் மக்கள் என்ன ஆனுர்கள்? இங்குத் தீ வைக்கப்பட்ட தின் காரணம் என்ன?

பிர :—பதராதே மனேகர், பதராதே. இந்நகரத்தின் பட் டியலைக் கூறுகிறேன் பதராமல் கேள். இந்நாட்டின் மன்னனுக்கு ஓர் மகள் உண்டு. பருவமடைந்த அம்மங்கை தன் மணுளனைத் தானே தேடி எடுத்துக்கொண்டாள். நாளுக்கு நாள் அவர்களின் மாசற்ற காதல் மென்மேலும் வளரத்தொடங்கிவிட்டது. வருடம் ஒன்றும் கரைந்து மறைந்தோடியது. முடிவு என்ன? அந்த மங்கை கர்ப்பவதியானுள். ஒரு நாள் இரவு காதலர்கள் இருவரும் அரண் மனையின் அந்தப்புறத்தில் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்கள் பேசியது வீண் வார்த்தையல்ல. தமிழ் நாட்டிலே அவ தரித்து வீரத்திலே சிறந்து விளங்கிய ஒரு தீரனின் கதையைச் சொல்ல ஆரம்பித்தான் தன் காதலிக்கு. அம்மங்கையும் தன் மணுளனின் மேல் சாய்ந்தவாறு கதையைக் கேட்கத்தொடங்கினுள்.

மனே :—அது என்ன கதை பிரதாப்?

பிர :—சொல்லுகிறேன் கேள்,

(திருப்புக் காட்சி) (திரை விழுதல்)

களம் 2

இடம் :—அந்தப்புரம்
காலம் :—இரவு
இருப்போர் :—சோமுநாத், கலா, குடிலன்
(இருவரும் அமர்ந்து இருத்தல்)

கலா :—நாதா, ஒரு கதை சொல்லுங்களேன்.

சோமுநாத் :—நான் என்ன கதை சொல்லப்போகிறேன் கண்மணி. உன்னுடைய நிலையை நினைத்தால் உள்ளம் அதிர்ச்சி அடைகிறது. மனதோ ஒரு நிலையில் இல்லை. இவ்வாறு இருக்கும் பொழுது நான் உனக்கு எவ்வாறு கதை சொல்லமுடியும் கலா ?

கலா :—மனத்திற்குச் சாந்தியைத்தரும் ஒரு கதை சொல்லுங்களேன்.

சோமு :—வீரம் செறிந்த கதைகள் சொன்னால், உன் வயிற்றில் வளரும் சிசுவுக்கும் வீரவுணர்ச்சிபெருகும்.

கலா :—சரி! ஆகட்டும் நாதா.

சோமு :—கொங்கு மண்டலத்து அரசர்களைத்தோற்கடித்துக் கங்கை வரையில்சென்று விரட்டிய செங்குட்டுவன் வஞ்சிமாநகரம் வந்திருந்த காலை வடவாரிய மன்னராங்கோர் மடவரலை மாலை சூட்டியுடனுறைந்த இருக்கைதன்னில் ஒன்றுமொழி நகையினராய்த் 'தென்றமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவிற் புலிகயல் பொறித்த நாள் நம்போலு முடிமன்னரீங்கில்லை போலும்' என்ற வார்த்தை ஆங்குவாழும் மாதவர் வந்தறிவுறுத்த விடத்தாங்கணுருள்கின்ற மணில்வட்டை குணில்கொண்டு துரந்ததுபோல் இமயமால்வரைக் கற்கடவுளாமென்ற வார்த்தை இடந்துரப்ப, ஆரிய நாட்டரசோட்டி அவர் முடித்தலை யணங்காகிய பேரிமயக் கல்சுமத்திப் பெயர்ந்துபோந்து நயந்தகொள்கையிற் கங்கைப்பேராற்றிருந்து நங்கைதன்னை நீர்ப்படுத்தி, வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி வஞ்சிமாநகர் புகுந்து நிலவரசர் நீள்முடியாற் பலர்தொழு படிமங்காட்டிக் கடவுண் மங்கலஞ்செய்த பின்னால் கண்ணகிதன் கோட்டத்து மண்ணரசர் திறைகேட்புழி யலம்வந்த மதிமுகத்தில் சில செங்கயல்-நீருமிடிப்பொடியாடிய கருமுகில்தன் புறம்புதைப்ப வறம்பழித்துக் கோவலன்றன் வினையுறுத்துக் குறுமகனாற் கொலையுண்ணக் காவலன் தனிடஞ்சென்ற கண்ணகிதன் கண்ணீர்கண்டு மண்ணரசர் பெருந்தோன்ற லுண்ணீரற்றுயிரிழந்தமை மாமறையோன் வாய்க்கேட்டு, மாசாத்துவான் தான்துறப்பவும் மனைக்கிழத்தி உயிரிழப்பவும் எனப் பெருந்துன்பமெய்திக் காவற்பெண்டும் அடித்தோழியும் கடவுட் சாத்தனுடனுறைந்த தேவந்தியுடன்கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரைமாநகர் புகுந்து கேட்டாங் கடைக்கலமிழந்து உயிரிழந்த இடைக்குல

மகளிட மெய்தி, யையையவள் மகளோடும் வையை யொருவழிக் கொண்டு, மாமலைமீமிசை யேறிக் கோமகடன் கோயில்புக்கு நங் கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவர்க்குத் திறமுறைப்பர்மன்.

[இவைகள் யாவற்றையும் மறைவிலிருந்து குடிலன் பார்த்துக் கொண்டிருக்கிறான். முடிந்ததும்]

குடிலன் :—அடிப்பாவி துரோகி! என் தலையில் கல்லைத்தூக் கிப்போட்டுவிட்டாயே! நீ என் மகளா? இல்லவே இல்லை. ஏ நாசக்காரி. இவ்வளவு நாட்கள் தெரியாதே நீ இப்படி நடப்பா யென்று. இப்பொழுதுமட்டும்-உன்னை வீணே விடப்போவதில்லை. உனக்கோர் கள்ளக்காதலன்.........அஹ்......ஹ......ஹா. இவ் வளவு நாட்கள் சந்தோஷமாக இருந்தது போதாதோ? இன்னும் சந்தோஷம் அனுபவிக்க வேண்டுமோ? இனிமேலாவது கொஞ்ச நாளைக்குப் பிரிந்திருங்கள்.

[எனக்கூறியவாறு தன் கையில் உள்ள தீப்பந்தத்தைத் தூக்கு கிறான். அப்பொழுது அவனுடைய மனச்சாட்சி பின் வருமாறு பேசுதல்.]

ஏ மூடா! அவர்கள் இளம் காதலர்கள். விட்டுவிடு அவர்களை. இந்த அரண்மனையை நீ எரிக்க முயன்றால் உன் பேரன் பிரதாபனால் பதினாறு கொலைகள் முடிந்து பதினேழாம் கொலைக்கு ஆதாரமான அவன் நண்பனால் இந்நாட்டின் குடியேற்றத்திற்கு மறுமலர்ச்சி ஏற்படநேரும். ஆதலால் இவர்களையும் இந்நாட்டையும் அழித் தல் தவறு. முயன்றால் உன் பிரஜைகள் நாசமாக நேரும்.

குடிலன் :—அஹ்......ஹ......ஹா. இந்நாட்டின் மறுமலர்ச் சியே எனக்குத் தேவை. என் மாசற்ற குலப்பெருமையிலே கலங் கத்தைத் தேடிவைத்துவிட்டாள். ஆதலால் இவர்கள் இருவருமே அழியத்தான் வேண்டும்.

சோமு :—கலா! வா தப்பித்துக்கொள்வோம். நீ தப்பிக்க உனக்குச் சம்மதம் இல்லை என்றாலும், உன் வயிற்றில் வளரும் சிசுக்காகவாவது நீ அவசியம் தப்பிக்கத்தான் வேண்டும். (என்று கூறியவாறு அவளைத் தூக்குதல்.)

(திரை விழுதல்.)

களம் 3

இடம் :—அரண்மனையில் ஒரு பகுதி

காலம் :—இரவு

இருப்போர் :—பிரதாப், மனோகர்

பிர :–இதுதான் மனோகர் என் கதை.

மனோ :—உன் தாயும் தந்தையும் எவ்வாறு தப்பினர்?

பிர :—என் தந்தை, தாயைக் [illegible]த்திற்குத் தூக்கிச் சென்றுவிட்டார். அப்பொழுதே அவர்கள் [illegible]கள். கபாட

புரத்திலே தான் நான் பிறந்தேன். என் தந்தை வரலாறு முழுவதும் என்னிடம் சொன்னார். பிறகு அங்கே புயல் அடிக்கத் தொடங்கிவிட்டது. அப்பொழுது நான் என் வீரத்தை விரிவாக்கிக்கொள்ள தந்தையிடம் கூறிவிட்டு வந்துவிட்டேன். இங்கு வந்தது முதல் பதினாறு கொலைகளைச் செய்துள்ளேன் மனோகர். இறுதியில் உன்னைக் கண்டேன். என் பாட்டனின் மனச்சாட்சியும் உண்மையாயிற்று. இனிமேல் நாம் இந்நகரத்தை நிர்மாணிப்பதற்கு வழி வகுக்கவேண்டும்.

மனோ :—அப்படியெனின் இன்றே தொடங்குவோம் இக்காரியத்தை. நீ எண்ணிய எண்ணம் அனைத்தையும் முடித்துவைக்க, நானிருக்கிறேன் பிரதாப். கவலைப்படாதே. இதோ பார் இதன் உதவியைக்கொண்டு நாம் எல்லாவித காரியங்களையும் சாதித்துவிடலாம். (மனோகர் பிரதாபிடம் பொம்மையைக் காட்டுதல்.)

(திரை விழுதல்.)

களம் 4

இடம் :—குடிசை வீடு

காலம் :—காலை

இருப்போர் :—சோமுநாத், பிரபாகர், கலா

[சோமுநாத், கலா, பிரபாகர் மூவரும் அமர்ந்து இருத்தல்.]

பிரபாகர் :—அப்பா! அம்மா செத்து போயிடுவாங்களா அப்பா? ஏம்பா சொல்ல மறுக்கற சொல்லமாட்டியா அப்பா? அப்பா?

சோமு :—அம்மா செத்துப்போயிடுவாங்கன்னு உனக்கு யார் சொன்னது?

பிர :—பக்கத்து வீட்டுப் பாட்டி அப்பா!

சோமு :—பக்கத்து வீட்டுப் பாட்டியா ஹூ ஹூம்.

பிர :—ஆமாம் அப்பா! அப்பா! அப்பா!

சோமு :—தம்பி தொந்தரவு செய்யாதே என்னை. எனக்கு மனது நிம்மதியே இல்லை. என்றைக்குத்தான் என் மனம் சாந்தி அடையுமோ தெரியவில்லை மகனே! என் பழைய கதையை நினைத்தால் வருத்தம் மேலிடுகிறதே தவிர, குறையக் காணவில்லை. ஹூம்...........

கலா :—எதற்காக நீங்கள் அவனிடம் எல்லாவற்றையும் சொல்லுகின்றீர்கள்? நாம் வேதனைப்பட்டது போதாது என்று அவனையுமா வேதனைபடச் செய்யவேண்டும். ஐயோ ஆண்டவனே!

சோமு :—நீயோ ஆண்டவன் ஆண்டவன் என்று வேண்டுகிறாய். அவனோ உன்னை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. ஒரு

வர்க்குக் கஷ்டம் வந்தால்தான் ஆண்டவன் என்று ஒருவர் இருப்பதாகத் தெரியவருகிறது. கடவுள் என்ற பெயரைச் சொல்லி விளையாடுகிறது கலா! உலகம் விளையாடுகிறது. (அசட்டுச் சிரிப்பு.)

கலா :—நீங்கள் வேதாந்தி என்று தெரிந்தும் உங்களிடம் சொல்லவந்தேனே அது என்னுடைய தவறு.

சோமு :—தவறு என்று சொல்லிவிட்டுச் சும்மா இருக்காதே கலா. தாடையில் போட்டுக்கொள்.

பிர :—தப்பு ! தப்பு ! (தாடையில் போட்டுக் கொள்ளுதல்) அப்பா ! நான் போட்டுக்கொண்டேன். பழைய கதையைச் சொல்லுங்கள் அப்பா !

சோமு :—நகரம்பற்றி எரியும்பொழுது, யாரோ வீணை வாசித்தானும்; அதுபோலல்லவா நீ பழைய கதையைச்சொல் என்கிறாய்? (ஏளனச் சிரிப்பு) சிறுபிள்ளைத்தனம் என் செய்வது ? சொல்லுகிறேன் கேள்.

பிர :—சொல்லுங்கள் அப்பா.

சோமு :—கவனமாகக் கேள்.

(இதற்கிடையில் கலா எழுந்துசெல்லுதல். இதுகண்ட சோமுநாத்) ஏன் கலா நீ மட்டும் செல்லுகிறாய்? நீயும் கதையைக் கேளேன் ?

கலா :—ஆமாம் உங்கள் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தால், என் கதை என்னவது ? நாளையோ, இன்றோ என்று இருக்கிறது என் நிலைமை. (தன் வயிற்றில் கையை வைத்தவாறு) அப்பா !

சோமு ;—கவலைப்படாதே கலா.

[கலா உள்ளே செல்லுதல்]

பிர :—என்ன அப்பா பேசாமல் இருக்கிறீர்களே ?

சோமு :—இதோ பார் முழுமையும் சொல்ல என்னால் முடியாது. தொந்தரவு செய்யாதே. ஏதோ கொஞ்சம் சொல்லுகிறேன். ஒரு சமயம் நாங்கள் கபாடபுரத்தில் வசித்தபொழுது உனக்கு ஓர் அண்ணன் இருந்தான். கபாடபுரத்தில் புயலடிக்கத் தொடங்கிவிட்டது. உன் அண்ணன் எங்கோ தப்பித்துச் சென்றுவிட்டான். பிழைத்துவந்தது நீயும் கலாவும் நானும்தான். முடிவில் இங்கே குடியேறினோம். இதுதானப்பா என் பழைய கதை.

பிர :—(கொட்டாவி விடுதல்) அப்பா எனக்குத் தூக்கம் வருகிறது.

சோமு :—என்ன பிரபாகர் காலையிலேயே தூக்கம்? நேற்றிரவு நன்றாகத் தூங்கினாயே. கதை சொன்னால் இப்படித்தான். (பிரபாகர் படுத்தல். சோமுநாத் அவனைத் தட்டுதல்.)

(தொடரும்).

வைத்தியம்

வேப்ப மரம்

தமிழ்ப்புலவர், சிவ. முருகசிவம் அவர்கள்
[75, நைனியப்பன் தெரு, சென்னை - 1.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

வேப்ப மரத்தின் ஒவ்வொரு பொருள்களும் நம் உடம்புக்கு நன்மை செய்வதால் அதனை இதன்கீழ் ஒவ்வொன்றாகச் சுருங்கிய அளவில் விரித்து ஆராய்வாம்.

1. தளிர் :—வேம்பின் தளிரோடு மிளகு, சீரகம், பூண்டு. பெருங்காயம், சுக்கு, உப்பு இவைகளைக் கூட்டியரைத்துக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் அஜீரணம், வயிற்றுவலி, ஜுரம் முதலிய நோய்கள் தீரும்.

2. வேப்பம்பூ :—வேப்பம் பூவில் கசப்பு இருப்பதால் வருஷத்திற்கு ஒரு முறையாவது சாப்பிடவேண்டும் என்று தமிழ் வருஷப் பிறப்பன்று சமைக்கச் செய்தார்கள். அப்படிச் சமைக்காமல் வைத்துப்படைக்கும் சடங்காக மாறிவிட்டது. மனிதனுக்கு ஆறு வகை சுவையில் கசப்பு ஒன்று. அது கட்டாயம் உடலுக்குச் சேர வேண்டும்.

மேலும் அதனைக் காயவைத்து எடுத்து வைத்துக்கொண்டு வேப்பம்பூ தொகையல், குழம்பு செய்துகொள்ளலாம். கியாழம் போட்டு, காப்பிபோல் சாப்பிடலாம் காப்பிக்கு உண்டான கசப்பு, நிறம், மணம் உண்டெனினும் குணம் மாத்திரம் வேறு. அஃது இரத்த சுத்தியும் பித்த சாந்தியும் செய்யும்.

3. இலை :—வேப்பிலையால் அநேக குணங்களுண்டு. ஒரு பிடி வேப்பிலையும் நாற்பது மிளகும் சேர்த்தரைத்துச் சுண்டைக்காய் அளவு காலை மாலை சாப்பிட்டுவந்தால் வயிற்றிலுள்ள திமிர்ப்பூச்சிகள் நாசமாகும். பித்த குன்மவியாதிகள் போகும். அஜீரணம் நீங்கும். ஜுரம் குறையும். அதனோடு பெருங்காயம் சேர்த்துச் சூதகப் பெண்களுக்குக் கொடுக்க சூதக வாயு, சூதக வலி நீங்கி கர்ப்பந் தரிக்கும். விஷபேதி காணும் காலத்தில் ஒரு பிடி வேப்பிலை, ஒரு கறிமஞ்சள், அரைப்பலம் ஓமம் இடித்துப்போட்டு ஒரு படி நீரில்

கொதிக்கவைத்துக் கொடுக்க விஷபேதி நீங்கும். கால் படி தண்ணீரில் ஒருபிடி வேப்பிலேயை இடித்துப்போட்டு அரைக்காற் படியாக சுண்டக் காய்ச்சி மூன்று மணி நேரத்திற்கொரு முறை ஒரு அவுன்ஸ் வீதம் உட்கொண்டால் விஷசுரம் நீங்கும்.

மேலும், இதனுல் இரத்த விருத்தியுண்டாகும் இந்தக் கியாழத்தை இரணங்களின்மேல் அலம்ப இரணம் சீக்கிரம் ஆறிவிடும். வைத்தியர்கள் வேப்பிலேயோடு கௌரி பாஷாணம், தாளகம், வீரம், பூரம், லிங்கம், மயில்துத்தம் முதலியவைகளேத தனித் தனிச்சேர்த்து அரைத்து மாத்திரையாக்கி, தக்க ஜுரங்களுக்குக் கொடுப்பதுண்டு.

4. ஈர்க்கு:—வேம்பின் ஈர்க்கோடு, மிளகு சேர்த்துக் கியாழம் வைத்துச் சாப்பிட நாட்பட்ட ஜுரங்களும் பேதியும் நீங்கி குணமாகும்.

5. குச்சி :—வேப்பங்குச்சியால் பல் துலக்கினுல் பல் நன்ருகத் துலங்கும். ஈறில் இருக்கும் கிருமிகள் நசித்துவிடும். பித்தம் குறையும். ஒரு சிலர் பட்டையோடு வேப்பங்குச்சியை மென்று விளக்காமல் மேற்பட்டையை நீக்கிவிட்டு மென்று பல் விளக்குவதால் யாதொரு குணமுங்கிடையாது.

6. பழம் :—வேப்பம் பழத்தைப் பிழிந்து ரசமெடுத்து அதனேடு தேனும் நெய்யும் கலந்து சாப்பிட சுவாசக்குழாயின் இரணங்களே ஆற்றும். மூளேக்குப் பலத்தைக் கொடுக்கும். இரத்தத்திலுள்ள விஷங்களே மாற்றி குணந்தரும். இந்தப் பழரசம் வைத்தியர்களுக்கு மிக உபயோகமாகும்.

7. கொட்டை :—வேப்பம் பருப்போடு கஸ்தூரி மஞ்சள், வெள்ளே மிளகு, நெல்லிவித்து, கடுக்காய்த்தோல் ஆகியவைகளேப் பாலிலரைத்துத் தலேமுழுகிவர சிரரோகங்களே நீக்கும். கண்ணின் வியாதியைப்போக்கும்.

8. வேப்பெண்ணெய் :—இரணங்களே ஆற்றும். விஷக்கிருமிகளேக் கொல்லும். உஷ்ணத்தையுண்டாக்கும். அண்டத் தயிலத்தோடு சேர்க்க உதவுகிறது. கழுத்து வலிக்குத் தேய்த்து ஒத்தடம் (Fomentation) கொடுக்க கழுத்துவலி நீங்கும்.

9. பிசின் :—வேம்பின் பிசினியை ஜலத்தில் ஊறவைத்து வடிக்கட்டி சர்க்கரை சேர்த்துச் சாப்பிட இரணத்தை ஆற்றும். மூளேக்குப் பலம், தாதுவிருத்தி முதலியனசெய்யும். இதனே லேகியத்திலும் சேர்த்துச் சாப்பிடலாம்.

10. வேப்பங்கள் :—இஃது இரண்டு வகைப்படும் நாட்பட்ட மரத்திலிருந்து இரண்டு, மூன்று நாள் சப்தமுண்டாகித் தானுக பால் வடியும். இந்தப் பால் நாளேந்து நாள் வரையில் வடிந்து கொண்டிருக்கும். மற்ஞெரு விதம் நம் முயற்சியால் தென்னங்கள் பனங்கள் இறக்கப்படுவதுபோல இறக்கப்படுவது. .. இதற்கு

மயக்கம் இருக்காது. அதனுல் இதை வேப்பம் பால் என்று சொல்லுவார்கள். இதைச் சாப்பிட்டால் நரம்புகளுக்கு ஆண்மையைக் கொடுக்கும். தாது விருத்திச்செய்யும். வயிற்று இரணங்களை ஆற்றும். குஷ்டரோகத்தையும் நீக்கும்.

11. வேம்பின்பட்டை :—நூறு வருஷத்திற்கு மேற்பட்ட மரத்தின் பட்டையைக் கொண்டுவந்து உபயோகப்படுத்தினுல் மேகப்புண், வாய்வு, நீண்ட நாள் ஜுரம் போகும். உபயோகப்படுத்துவது என்ருல் இடித்துக் கியாழம் போட்டுச் சாப்பிடலாம். சூரணம்செய்து சர்க்கரை கலந்து சாப்பிடலாம், லேகியமாகவும் செய்து சாப்பிடலாம்.

12. வேம்பின் வேர் :—அதன் பட்டையைக் கியாழம் வைத்துச் சாப்பிட இரத்தம் சுத்தியாகும். மேக ஜுரங்கள் எல்லாவற்றையும் வெகு விரைவில் கண்டிக்கும்.

வேப்பமரத்தின் எல்லாப் பொருள்களும் உடம்புக்கு நன்மை செய்வதால் அதனை நம்தமிழ் நாட்டில் பூசைசெய்யும் வழக்கம் இருந்து வருகின்றது. வேம்பின் குணம் இன்னும் பல இருப்பதால் மீண்டும் விளக்க எண்ணி நிறுத்துகிறேன்.

——(o)——

யார் பெற்ற செல்வம்!

திரு. M. A. C. பச்சையப்பா, கும்பகோணம்.

18-வது சீன்

(செல்வந்தர் வீடு)

(பர்வதா, ராஜாவின் துர்நடத்தைகளை நினைத்தபடி வியாகூலமுடன் பாடிக்கொண்டிருக்கிருள். (சோகமான பாடல்.) அச்சமயம் அங்குவந்த வளர்ப்புத் தந்தையான செல்வந்தர். பாட்டு முடியும்வரை நின்றுகொண்டிருந்துவிட்டுப் பாட்டு முடிந்ததும்.)

செல்வந்தர் :—(பர்வதாவினருகில்வந்து தலையை நீவியபடி) பர்வதா! ஏனம்மா இப்படிப் புலம்பிக்கொண்டே யிருக்கிருய்? உன் அன்பின் தன்மையறியாத அந்த அயோக்கிய சிகாமணியைப் பற்றி நினைத்து நினைத்து விசனப்படுவதில் என்ன பிரயோசனம்?

பர்வதா :—ஆமப்பா! நிஜமான வார்த்தையை நிலையில்லாததென்று இப்பொழுது தானப்பா உணர்ந்தேன்!

செல் :—ம்......நேர்மையாக அன்பைக் காப்பாற்றத் தெரியாத அறிவிலிகள் அநேகருண்டம்மா இவ்வுலகில்!

பர் :—ஆம்! அந்தப்பட்டியலில் தான்......நம் அத்தானும்............?

செல் :—முதன்மை ஸ்தானம் பெற்றுவிட்டானம்மா !

பர் :—உண்மைதானப்பா ! என் கற்பனையெல்லாம் வெறுங் கனவாகுமென்று நான் கருதவேயில்லையப்பா !

செல்:—என்னம்மா செய்வது? உன்னைக் கற்சிலையென்றல்லவா கருதிவிட்டானக் கயவன். பர்வதா ! பொற்சிலைபோல் போற்றி வளர்த்த உன்னை இனிமேலக் கரும்பூனைக்கா பலியிடுவேன். இனி ஒருபோதும் என் மனம் இடங்கொடாதம்மா !

பர் :—அப்பா ! நம் அத்தான் ஊர்திரும்பி ஒரு மாதமாகியும் நம் வீடுவராமல், அவர் நண்பனாகிய மோகனுடன் சேர்ந்து கொண்டு, யாரோ நளினா என்கிற டான்ஸ்க்காரியோடு சிநேகம் கொண்டு. ஊர் சுற்றுவதாக நம் வேலைக்கார டல்லு மூலம் கேள்விப்பட்டேனப்பா ! ஏம்பா ? இனிமேலவரை நல்வழியில் திருத்த முடியாதாப்பா ?

செல் :—எப்படியம்மா முடியும்? பாலைவனத்தில் நட்ட பசுங் கொடியின் நிலை என்னவாகும்? அதுபோல் தானம்மா ஆகும் ! ம்...இனிமேலா ? நாகரீக வேட்டையில் நளினாவோடும் மேனாட்டு மோஸ்தரில் மோகனோடும் பழகியவனா திருந்தப்போகிறான் ? அப்படியவன் திருந்த வேண்டுமானால் அவர்களாலேயே வெறுத்துக் கைவிடப்பட்டால் ஒரு வேளை திருந்தலாம். இல்லையானால் . . . . .

பர் :—அப்பா என் வாழ்வு ?

செல் :—வளமடையச்செய்ய வேறொரு மணாளனைத் தேர்ந்தெடுத்துவிட்டேன் கண்ணே ! கவலையுறாதே பர்வதா ! (என்று தலையை நீவிவிடுதல்.)

பர் :—அப்பா ! (என்று கண்களைப்பொத்தியபடி செல்வந்தர் மார்பில் சாய்தல்.)

செல் :—வருந்தாதே பர்வதா. இனி அந்த அயோக்கியப் பயலைப்பற்றிக் கனவிலும் நினையாதே. அவனுடைய உறவே நமக்கு வேண்டாம்.

பர் :—(தலைநிமிர்ந்து பார்த்தபடி) ஏனப்பா இப்படிக் கோபமுடன் கூறுகிறீர்கள் ?

செல் :—அந்த அயோக்கிய நாய்க்கு அனுதாபம் காட்டச் சொல்கிறாயா அம்மா? இனி அவன்முகத்தில் விழிக்கப்போவதில்லை. எக்கேடுகெட்டு ஏகாங்கியாய்ப் போனாலும் ஏனென்று கேட்கப் போவதுமில்லை. இனி உனக்குக் கூடிய சிக்கிரத்தில் கலியாண ஏற்பாடுசெய்கிறேன். கவலைப்படாமலிரு பர்வதா !

பர் :—கலியாணமா எதற்கப்பா ?

செல் :—எதற்கா ? வேடிக்கையாயிருக்கம்மா, நீ கேட்பது ? கலியாணம் உனக்குதாம்மா ! அதுவும் வயதுவந்த பெண் !

பர் :—(கிட்டநெருங்கி) எனக்கு இப்ப என்னப்பா அவசரம்? இப்பவேண்டாம் பிறகு பார்த்துக் கொள்ளலாமப்பா! நானும், அத்தான் ராஜாவும்...............,..

செல் :—சிறு வயதிலிருந்தே தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி ஓடி விளையாடியவர்கள் தாம்! என்னசெய்வது? நல்லமுறையில் படித்து வருவானென்று நினைத்து அனுப்பப்போக நாதேரிதனமா நடப்பானென்று யாருக்கம்மா தெரியும்? ம்...பணத்தைப் பம்பரமால்லா ஆட்டிப்பார்த்துட்டான்! என்னசெய்வது? என் தங்கைக்குக் கொடுத்த வாக்கை மீறக் கூடாதென்றுதானிருந்தேன். அவனே என்னை மீறும்படி செய்துவிட்டானே. ம்......இந்தப்பய ராஜாவின் அப்பனுடைய கௌரவமென்ன! மாமாவுடைய (என்னுடைய) கௌரவமென்ன! இதையெல்லாம் கொஞ்சமாவது சிந்தித்துப்பார்த்தானு இந்தச் சிர்கெட்டப்பய! ஊர் பூராபேரு என்னடான்னு! செல்வந்தர் தங்கை மகன் ராஜா வேசிகளுடன் குடிக்குலாவி கும்மாளமடிக்கிறுன் அப்படின்னு ஊரே சிரிப்பது உனக்கு எப்படியம்மா தெரியும்?

பர் :—ஆமப்பா! எப்பொழுதுமே இந்நாடு சிரித்துச் சிரித்துச் சீரழியும் சீர்கெட்ட நாடுதானப்பா.

செல் :—என்னம்மா இப்படிக் கூறுகிறுய்? சீர்மிகுந்த நாடு செல்வமிகுந்த நாடு என்று எத்தனையோ கவிதையாளர்கள் போற்றிப் புகழுகிறுர்கள். நீ என்னடான்னு.......?

பர் :—குற்றங் கூறவில்லையப்பா! ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிகளுக்குக் கொண்டாட்டமல்லவா?

செல் :—ஓ......! அதுக்குச் சொல்கிறுயா? பேஷ்! அருமையாகப் பேசுகிறுயே?

பர் :—பேசுவதில் பிரயோசனம்? ஊரே சிரிக்குதென்று சொன்னீர்களே. அதன் உவமைக்கு முகாந்திரந்தான் நான் சொன்னது! ஊரிலே உள்ள பலர் பலவிதமாகப் பேசத்தான் செய்வார்களப்பா! ஏனென்ருல்? வறுமைதான் காரணம். அந்த வறுமையானது மனிதத்தன்மை யுள்ளவர்களைக் கொடுமைத்தனத்திலிறக்கிவிட்டு வேடிக்கையும் பார்க்கிறதப்பா!

செல் :—ஆம் பருவதா! இருக்கிறவன் இதைப்பற்றிப் பேச நேரமேதம்மா? இப்போ நம்மையே எடுத்துக்க! எவன் எப்படிப் போனு நமக்கென்ன என்று நான் சொல்லவில்லையா?

பர் :—என்னப்பா அப்படிச் சொல்லுகிறீர்கள்? ஒருவேளை நாளைக்கே நம் அத்தான் வந்து தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால்?

செல் :—மன்னிப்பா? இனிமேலா? ஒருக்காலும் சம்மதியேனம்மா! உனக்கு நான் நியமித்திருக்கும் மாப்பிள்ளை சிவலோகபுரம் கண்மணி வீவிங்பாக்டரி உரிமையாளர் கோவிந்தனவர்

களின் ஸ்வீகாரப் புத்திரனும் அவருடைய தங்கை மகனுமாகிய குமார். அவனுக்குக் கலியாணம் முடித்துவைப்பதாக அவர்களுக்கு உறுதியளித்துத் தபாலும் எழுதிவிட்டேன் பர்வதா! அநேகமாக அவர்களும் இன்றோ நாளையோ உன்னை நிச்சயதார்த்தம் செய்ய வருவார்கள், இனி நீ அந்த ராஜாப் பயலை மறந்துவிடவேண்டியது தான் சொல்லிவிட்டேன்.

பர் :—அய்யோ! ஹா! அப்பா! தாங்களா? இத்திட்டத்தி லிறங்கிவிட்டீர்கள்? அய்யோ! வெயிலை நிலாவென்றெண்ணிய குருடன் கதையாகவல்லவோ ஆகிவிட்டது என் நினைவும். அப்பா! அம்மா! அம்மா! (தொடரும்,)

——(o)——

இளங்குமரி

(திருமதி V. P. N. தைலம்மாள் நல்லப்பன், N. புதுப்பட்டி)

நடு நிசி! ஊரே உறங்கும் ஓய்வான நேரம்! கோட்டான் கூவிற்று. ஆந்தை அலறியது. கருத்திருந்த வானத்தில் மின்னலும் இடியும் மிதமிஞ்சிவிட்டதால் மின்சார விளக்குகள் அணைந்துவிட்டன. சே...என்ற பேரிரைச்சலுடன் மழை பெய்யத் தொடங்கி தன் பலத்தை ஒரு கை காட்டிவிட்டு ஓய்ந்தது.

அமைதி ஆட்சிபுரியும் அந்நள்ளிரவிலே இளங்குமரி தன் படுக்கையினின்று புரண்டு படுத்துக் கண்களைத் திறந்து பார்த்தாள். அப்போது அவருக்கு நள்ளிரவினைப்பற்றின சிந்தனை இல்லை. தனித்துக்கிடந்த ஒற்றை விண்மீனை வலைவீசிப்பிடிக்க எத்தனித்தாள். முடியவில்லை. பின் அசதி அவள் கண்களைத் தானே மூடி உறக்கத்தில் ஆழ்த்தியது. அழகுருவைப் படைக்கப் பிரமன் ஆக்கி வைத்த வார்ப்படமோவென ஐயுறும் எழிலுடன் பருவம் பொங்கி நின்றது. ஆனால் அவள் ஓர் ஏழைப் பெண். ஓரளவு படித்தவள். மேலும் படிக்க அவள் பருவம் தடையாய் இருந்ததால் அவளின் தந்தை வேலுசாமி நாட்டார் கல்விக்கூடம் அனுப்பவில்லை. வீட்டுச் சிறையில் கூண்டுக்கிளிபோல் இருக்க நேர்ந்தது.

ஒரு நாள் மாலை மணி 6 இருக்கும். இளங்குமரி தண்ணீர்க் கொண்டுவர ஆற்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். இடுப்பிலே குடம் ஏந்தி அன்னநடை நடந்துசெல்வதே அவள் உடலுக்கு ஓர் தனி அழகைக்கொடுத்தது. அவள் பார்வை அவளுக்கு எதிரே வந்துகொண்டிருந்த வாலிபன்மீது சென்றது. அதனல் வழியில் இருந்த ஒரு முள் அவள் காலில் ஏறியதும் ஐயோ அம்மா ......என்று குடத்தைக் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்தாள்.

சிந்தனையில் ஆழ்ந்து தலையைக் குனிந்துகொண்டே வந்த வாலிபன் அவ்வலறலைக்கேட்டுச் சுய நினைவடைந்தவனாய் அவள் இருப்பிடத்தை நோக்கி ஓடிவந்து பார்த்தான். அவள் காலைப்

பிடித்தவாறே உட்கார்ந்திருப்பதைக் கண்டு அம்முள்ளைப் பிடுங்கி எறிய குனிந்து வெடுக்கெனப் பிடுங்கினான். காலிலிருந்து இரத்தம் பீறிட்டுவந்தது. உடனே தன் கைகுட்டையை எடுத்து இரத்தம்வந்த இடத்தைச் சுற்றிக்கட்டினான், சிறிது மௌனம் அவ்விடத்தே நிலவியது. பின் இளங்குமரி அவ்வாலிபனைப் பார்த்துத் தாங்கள் யார்? எந்த ஊர்? எனக்காகத் தாங்கள் செய்த உதவிக்கு நன்றி.

வாலிபன் :—ஏன்? என்னைப்பார்த்தால் அயலூர் என்று தோன்றுகிறதோ?

இ. குமரி :—ஆம்.

வா :—ஓஹோ உனக்கு ஆருடம்கூடத் தெரியுமோ? எனது ஊர் கோபாலபுரம். சேலம் மாவட்டத்தைச் சார்ந்தது. இங்கு தான் உபாத்தியாயர் பயிற்சிப் பள்ளியில் படிக்கிறேன்.

இ. கு. :—தங்கள் ஜாதி,

வா:—மனிதஜாதி. இருக்கட்டும் உன்னைப்பார்த்தால் படித்த பெண்ணாகவும், 20-ஆம் நூற்றாண்டு பெண்ணாகவும் தெரிகிறது. மூடப்பழக்கங்கள் ஒழிந்து பகுத்தறிவுகொண்டு பழமையை ஒழித்துவரும் இந்நாளில் ஜாதிமதம் என்று பேசலாமா?

இ. கு. :—மன்னியுங்கள். என் அறியாமை அவ்வாறு கேட்கச் செய்தது.

வா :—வருந்ாதே. உன் மனதை வீணில் வருத்தமடையச் செய்துவிட்டேன். நான் பக்தர் இனத்தைச் சேர்ந்தவன் பர்வத ராஜகுலம் என்றால்தான் எல்லோருக்கும் தெரியும். எனக்கு ஜாதி மதம் பேசும் மடாதிபதிகளையும், உயர்வு தாழ்வு பேசும் உன்மத்தர்களையும் பிடிக்காது. இம்மாதிரி உயர்வு தாழ்வு பேசுவதால் தான் சிதறி இருக்கும் எங்கள் குலமக்கள் ஒன்றுபட வழி இல்லாமல் இருக்கிறது அதனால் உன்மீது வருத்தமாகப் பேச நேர்ந்தது.

இ. கு. :—பரவாயில்லை. உங்கள் பெயர் என்ன? எங்கு தங்கியுள்ளீர்கள்.

வா :—என் பெயர் இளஞ்செழியன் நான் இவ்வூர் மாடர்ன் ஹோட்டல் 10-ம் நெம்பர் அறையில் தங்கியுள்ளேன்.

இ. கு. :—சரி உங்களை நெடுநேரம் தாமதிக்க வைத்துவிட்டேன். எனக்கும் நேரமாகிறது. சென்றுவருகிறேன். அப்போது இருவரும் மௌனமாக ஒருவர் முகத்தை ஒருவர் ஏறிட்டுப்பார்த்து நின்று புன்முறுவல் பூத்தனர். இளங்குமரி கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளாதவன்போலவே இருந்தான். மீண்டும் அவள் நேரமாகிவிட்டது என்றுகூறி அவ்விடத்தை விட்டகன்றாள். இளஞ்செழியனும் பெருமூச்சு விட்டவாறு தன் இருப்பிடம் நோக்கிவிரைந்தான்.

நாட்கள் சில கழிந்தன. ஒரு நாள் காலை 9 மணி இருக்கும் இளஞ்செழியன் தன் அறையில் நாற்காலியில் உட்கார்ந்தவாறு ஏதோ சிந்தனையிலிருந்தான். அப்போது சார் போஸ்ட் என்ற குரலைக்கேட்டுத் திரும்பிப்பார்த்தான். ஹோட்டலில் வேலைசெய்யும் பையன் ஒருவன் ஒரு தபால்கவரைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அதை இளஞ்செழியன் யார் அனுப்பியது என்று அனுப்பியவர் முகவரியைப் பார்க்கலானான். ஆனால் அதில் அனுப்பியவர் முகவரி இல்லை. பின் எங்கிருந்துவந்தது என்று முத்திரையைப் பார்த்தான். இரண்டு முத்திரைகளும் கடலூர் என்றே இருந்தது. உள்ளூரிலிருந்து எனக்கு அஞ்சல் அனுப்ப யார் இருக்கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டான். யார் அனுப்பினாலென்ன என்று எண்ணியவாறு உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்துப்படிக்கலானான்.

அன்பரே! தங்கள் உள்ளத்தை அறிந்து என் சிறிதளவு படிப்பின்மூலம் என் உள்ளத்தைத் திறந்து இவ்வஞ்சலை வரைகிறேன். உங்களைச் சந்தித்த நாள் முதலாய் என் உள்ளம் அடையும் வேதனையைத் தாங்கள் அறியீர். உங்களுக்காகவே வாழ்கிறேன் வாழவும் போகிறேன். உங்களை அடைய எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் இன்முகத்துடன் ஏற்க நிற்கிறேன். உங்களையே மணந்து என் வாழ்வை வளமாக்கக் கருதுகிறேன். அன்றொரு நாள் ஆற்றுக்குச்செல்லும் வழியில் சிதறிக்கிடக்கும் எங்கள் குல மக்கள்......என்று உணர்ச்சி ததும்பத் தாங்கள் பேசியபோதே என் உள்ளத்தை உங்கள் வசமிழந்தேன். வாழ்வின் வடதுருவம் நான்; தென் துருவம் நீங்கள். வாழ்க்கை என்ற காந்தம் இருதுருவங்களையும் ஒருங்கே இழுக்கிறது. வாழ்வில் சேர்ந்தால் நாம் இருவருமே சேர்ந்து சிதறிக்கிடக்கும் நம் சமூகத்தை ஒன்று சேர்க்கலாம் என்ற உறுதிபூண்டுள்ளேன். ஆச்சரியப்படாதீர்கள்...... நான் வேற்றினம் அல்ல; உங்களினமே. ஆனால் பட்டப்பெயர் நாட்டார் என்பதேயாம். என் உடலை உங்களுக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன். என்னை எப்படியும் காப்பீர்கள் என்ற தளரா உறுதியுடன் இவ்வஞ்சல் வரைதலை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்குத் தங்கள் அன்பை நாடும்
இளங்குமரி,
11, செங்கல்வராயன் தெரு, கடலூர் N.T.

கடிதத்தை படித்து முடித்ததும் பரவசமடைந்தவனாய்த் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி 9-20 ஆயிற்று. பள்ளிக்கு இன்னும் 30 நிமிஷ நேரமிருக்கிறது என்று தனக்குள் எண்ணியவனாய் இளங்குமரிக்கு மறு அஞ்சல்வரைய தன் லெட்டர்பேப்பரில் வரையலானான்.

"அன்பே! உன் அஞ்சலை அடையப்பெற்று அளவற்ற ஆனந்தமடைந்தேன். உன்னைச் சந்தித்த நாள் முதலாய் மீண்டும்

மறுசந்திப்புக் கிட்டினுல் என் எண்ணத்தைக்கூற எண்ணியிருந்தேன். ஆனுல் அவ்வாய்ப்பை அஞ்சல் மூலம் அடைய ஏதுவாக உன் அஞ்சல் அறிவித்தது. நீயும் என் இனம் என்பதைக் கண்டு களிப்புற்றேன். அன்று இதையெல்லாம் நீ கூருததைக்கண்டு வியப்புற்றேன். நான் பேதம்பார்க்கும் பேடியல்ல என்பதை நீ நன்கு அறிவாய். நம் இருவர் உள்ளமும் ஐக்கியப்படும்போது பெற்ரோர்களோ, உறவினர்களோ, சட்டதிட்டம் பேசும் சதிகாரர்களோ என்ன செய்யமுடியும்? நம் இருவர் விருப்பத்திற்கும் மறுப்பாக எவரும் பதில் கூறமாட்டார்கள். கவலேவேண்டாம் கண்ணே! விரைவில் நடைபெறப்போகும் நமது மணம், பிரிந்து நிற்கும் நமது இனங்கள் ஒன்றுசேர ஓர் எடுத்துக்காட்டாகட்டும். நீ என்னேக் காணவேண்டுமானுல் இங்குவந்துபோகலாம். என் பயிற்சி முடிவுற்றதும் உன்னே என்னுடன் ஊருக்கு அழைத்துச் செல்கிறேன்.

உன் அன்புள்ள
நெடுஞ்செழியன்.

கடிதத்தை எழுதியபின் இருமுறை படித்து உறையினுள் இட்டு முகவரியை அழகாகவும், தெளிவாகவும் எழுதி ஹோட்டல் ஓரமிருந்த அஞ்சல் பெட்டியில் போட்டுவிட்டுப் பள்ளிசென்ருன்.

காலம் கடமையை நிறைவேற்றியவாறு கடுகி ஓடிக்கொண்டிருந்தது. இளஞ்செழியனும் பள்ளியில் வாசிக்கத் தொடங்கி விளேயாட்டுபோல் இரண்டாண்டு முடிவுற்றது. இளஞ்செழியன் பயிற்சிகாலமும் முடிவுற்று ஊருக்குப்போகும் நாள் இளங்குமரியை அழைத்துச்செல்ல அவள் இல்லம் வந்தான். இளங்குமரியும் அவள் தாயாரும் இருந்தார்கள். இளங்குமரியின் தாயார் இளஞ்செழியனே வரவேற்று இளங்குமரி சொல்லியதையெல்லாம் சொன்னுள். அவனும் இளங்குமரியை மணப்பதாக வாக்குக்கொடுத்துத் தந்தையற்ற இளங்குமரியை ஊருக்கு அழைத்துச்சென்ருன்.

இளஞ்செழியன் தன் இல்லம் வந்துசேர்ந்ததும் அவன் தாயார் மகிழ்ந்தாள். அதைவிட வீட்டிற்குத் தங்கப்பதுமையைப் போன்ற பெண் வந்தமையைக்கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தாள். அவன் தாயிடம் அப்பெண்ணேப்பற்றி கூறிவிட்டு வெளியே சென்ருன். மகன் வருகையை அறிந்த அவன் தந்தை வயலிலிருந்து சிக்கிரம் திரும்பிவந்தார். ஆனுல் அங்கே ஒரு பெண் இருந்ததைக் கண்டு பிரமித்து நின்ருர். வெளியே சென்றிருந்த இளஞ்செழியனும் அப்போது அங்கு வந்துசேர்ந்து அப்பா என்ருன். யார் இளஞ்செழியனு? சுகமுடன் வந்தாயல்லவா? அதுசரி இங்கேவா என்று ஓர் அறைக்கு அவனே அழைத்துச்சென்ருர்.

தந்தை :—அந்தப் பெண் யார்? எந்த ஊர்?

மகன் :—அப்பா அவள் நமது இனம். கடலூர் வேலுசாமி நாட்டார் மகள். அவர் இறந்துவிட்டார். இவளே நான் மணப்பதாக அழைத்துவந்தேன்.

த :—ஏண்டா அந்தப் பெண் நாட்டார் வகுப்பு; நாமோர் பக்தர் வகுப்பு. இதை நம் வகுப்பார் ஒப்புவார்களா ?

ம :—அப்பா இப்படியே ஒவ்வொருவரும் சொல்வதால் தானப்பா நம் பர்வதராஜகுலமே ஒன்று சேரவும், முன்னேற்றம் காணவும் வழியில்லாமல் இருக்கிறது. சீர்திருத்தம் பேசுகிறுர்களே தவிர செயல்வகையில்செய்ய முன்வர மறுக்கிறுர்கள். பருவதராஜகுல மகாநாடுகள் நடத்தி நம் இனமக்கள் எல்லோரும் கொள்வன கொடுப்பன வைத்துக்கொள்ள வேண்டுமென்று தொண்டை கிழியக் கத்தி சோடாபாட்டிலைக் காலிசெய்கிறுர்கள். அப்பேர்பட்டவர்கள் மேடைப் பேச்சோடு நிற்கிறுர்கள். நானே சீர்திருத்தம் பேசவில்லை. மேடை ஏறிக்கதறவில்லை. ஏதும்செய்யாத நான் இம் மணத்தால் அவர்களெல்லாம் அறிந்து சீர்திருந்த செய்யப் போகிறேன்.

த:—ஆகட்டும், உன் உறிமையைப்பரிக்க நான் விரும்பவில்லை. உன் இஷ்டம் நிறைவேறி எல்லாம்வல்ல இறைவன் அருளால் நீங்கள் பல்லாண்டு வாழுங்கள். காலப்போக்கை உணர்ந்து உன்னைப்போன்ற நம் இனவாலிபர்கள் மணம்புரிந்து பிரிந்து நிற்கும் நம் இனம் ஒன்றுபட வழிசெய்யுங்கள். அதனுல் நம் இனப்பெரியவர்கள் கொண்டிருக்கும் அபிலாஷையை நிறைவேற்றிய வீரர்களாவீர்கள் என்றுர்.

முடிவுரை :—பிறகு அவர்களின் வாழ்க்கை செவ்வனே சென்றதைப்பற்றியும், மகளைப்பிரிந்த தாய் மீண்டும் எவ்விடத்தில் இருப்பாள் என்பதைப் பற்றியும் நான் சொல்லாமலே தெரிந்து நீங்களும் இதைப் பின்பற்றி சிதறுண்ட நம் பெரிய சமூகம் ஒன்றுபட கடைபிடிப்பீர்களாக !

வாழ்க பர்வதராஜகுல மக்கள் !

குறிப்பு :—இக்கதையின் உயர்வு தாழ்வைக்கருதி இதைப் பிரசுரிக்கவில்லை. ஓர் பெண்மகள்-அதிலும் நம் இனமகள்-மிகவும் ஆர்வத்தோடு எழுதியதற்காகவே இதைப் பிரசுரிக்கிறேம். மற்ற படித்த பெண் மக்களுக்கும் இது வழிகாட்டியாக இருக்குமென நம்புகின்றனம்.—(ஆசிரியர்).

——(o)——

“ தேசிங்கு ராஜன் ”

(ஆக்கியோன் திரு. (கண்ணு) நா. அரங்கன், சின்னசிரகப்பாடி)

காட்சி 5

இடம் :—பாதை வழி
காலம் :—முற்பகல்
உறுப்பினர்கள் :—மாறன், வீரன், ரீம்சிங் (டில்லி தளபதி).

(மாறன், வீரன் ஆகிய இரு காவலாளிகளும். பாதை வழியே பேசியவாறு வருகின்றனர்.)

மாறன் :—ஏ! அண்ணே! நம்ப மகாராஜாகிட்டே இருக்கிற குதிரை பெரிய மாயாஜலக் குதிரையா இருக்குமோ? இதுவரையிலும் யாராலேயும் அடக்க முடியல்லியே!

வீரன் :- மாயாஜாலக் குதிரை என்ன தம்பி! நம்ப குதிரை மனசுவச்சா இந்திரலோகமேபோய், இந்திரனையே என்ன சேதின்னு கேக்கும்!

மா :—அடேடப்பா! இந்திரனுலேயே அடக்கமுடியாத இந்தக் குதிரையை எந்த மன்னந்தா வந்து அடக்குவாளுே தெரியலே.

வீ :—ம்மு! விட்டுத்தள்ளு தம்பி! நம்ப குதிரைரை அடக்குரத்துக்கு ஆளாவது! ஆள்றதாவது! தம்பி ஒரு விஷயமில்லே!

மா :—என்னே! அண்ணே?

வீ :—ஜெயில்லே இருக்காரே! செஞ்சிநாட்டு மன்னரு தரணிசிங்!

மா :—ஆமாண்ணே! அவருக்கென்ன!

வீ :—பாவம்! வேலாவேலே சாப்பிடறதில்லே. காலா காலத்திலே தூங்கரதில்லே. எப்போ பார்த்தாலும் ஒரே கவலேயாவே இருக்காரு.

மா :—அண்ணே! சிறைவாசம் சொர்க்வாசங்கிறது, அவருக்குத்தெரியலே. எனக்குமட்டும் அந்த வாசம் கிடைச்சிருந்தா, அப்படியே ஜாலியா மணி அடிச்சா சோத்தை வாங்கித்தின்னுட்டு மயிருவளர்ந்தா மொட்டை அடிச்சிக்கிட்டு, கொடுத்த வேலேயை ஒழுங்காசி செஞ்சிக்கிட்டு சொகுசா இருந்திருப்பேன்!

(இதைக் கேட்டவாறே தளபதி பீம்சிங் வருதல். பீம்சிங்கைக்கண்ட இருவரும் பயந்து, நடுங்கி பணிகின்றனர். அதுசமயம் பீம்சிங்.)

பீம்சிங் :—இருப்பிங்கடா! இருப்பிங்க! ஏ! இருக்கமாட்டிங்க சொகுசா! இந்த அரண்மனே அஞ்சுகாசு உங்களே அப்படி எல்லாம் பேசச்சொல்லுது. போங்கடா போங்க! போயி உங்க வேலேயை ஒழுங்காப் பாருங்க! போங்க!

(என்றுகூற ஒடிவிடுகின்றனர்.)

காட்சி 6

இடம் :—மணிமண்டபம்

காலம் :—காலே வேலே

உறுப்பினர் :—இராமாபாய், தளபதி, மெய்காப்பாளர், மகமத். தேசிங்கு.

தேசிங்கு:--(தாயாரைப் பார்த்து) அம்மா! எங்கள் பயணத்திற்கு அனுமதி கொடுங்கள்.

இராமாபாய்:--(தேசிங்கு, மகமத் இருவரையும் பார்த்து) செஞ்சியின் செல்வங்களே! வழிமேல் விழிவைத்து, உங்கள் வருகையை எதிர்நோக்கியவண்ணம் இருப்பேன்.

மகமத்;—அம்மா! காலம் கடத்தாது, குறுகிய காலத்திலேயே அக்குதிரையை அடக்கி, செஞ்சி மன்னர் அவர்களை மீட்டுவருவோம்.

தே:—ஆம். அம்மா! அனுமதி அளியுங்கள்.

இரா:—என் கண்களே! பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் பூரிப்படைய, விருதுபெற்று, வெற்றி வீரர்களாய்த் திரும்புவீர்களாக.

(இருவரும் வணங்குகின்றனர்.)

மெய்க்காப்பாளர்:—(மகன் மகமத்தைப் பார்த்து) மகனே மகமத்! இளவரசருக்கு எந்தவிதமான ஆபத்தும் அணுகாதவாறு பார்த்துக்கொள்வது . . . .

மக:—என் கடமை தந்தையே! கவலேவேண்டாம். கண்ணை இமை காப்பதுபோல் காத்துவருகிறேன் இக்கர்மவீரனை! (தேசிங்கு, தளபதியைப் பார்த்தது.)

தே:—டெல்லி பயணத்திற்கு வகை வகையாக, வழி வகுத்தவரே தங்களின் ஆசி!

தள:—விருதுகள் பல பெற்று, வெற்றி வீரர்களாய்த் திரும்புவீர்களாக.

தே:-(மெய்க்காப்பாளரைப் பார்த்து.) மெய்க்காப்பாளரே! தங்களின் அனுமதி.

மெய்:-எவ்வித அல்லல்களுக்கும் ஆளாகாமல், அவ்அசுவத்தை அடக்கிஆள, அல்லா அருள்புரிவாராக! சென்று வாருங்கள் வெற்றியுடன்.

(மகமத்தும், தேசிங்கும் விடைபெற்றுச் செல்கின்றனர்.)

காட்சி 7

இடம்:—சிறைக்கூடம்
காலம்:—பிற்பகல்
உறுப்பினர்:—ஷாஆலம், தரணிசிங், மாறன், வீரன்.

(தரணிசிங் சிறைக்கம்பிகளைப் பிடித்தவண்ணம் இருக்கிருர். மாறனும், வீரனும் பாரா பார்த்துக்கொண்டு இருக்கிருர்கள். அது சமயம் பாதுஷா வருகிருர். பாதுஷா சிறையினுள் இருக்கும் தரணிசிங்கைப் பார்த்துக் கிண்டலாக.)

ஷா ஆலம்:—செஞ்சி மன்னனே! சிறை வாசம் எப்படி? சுகம் தானே!

தரணிசிங் :—வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சாதே. பாதுஷாவே! உன் போக்கிரித் தனத்திற்கும், பொல்லாத பேச்சுக்கும், பிடிமானமற்ற செயலுக்கும் சாவுமணி அடிக்க இப்பாரில் எவனுவது ஒருவன் இருப்பான் என்பதை மறந்துவிடாதே.

ஷா :—(சிரித்தவாறே) சிறையிலே சித்தாந்தம். தரணிசிங்! தாறுமாருகப் பேசாதே. யாரிடம் பேசுகிருேம் என்பது ஞாபகமிருக்கட்டும்!

தர :—நன்கு இருக்கிறது. ஓர் குதிரையின் உதவியால், குறுநில மன்னர்களை எல்லாம் அடக்கிஆளும் ஓர் கோழையினிடத்தில் பேசுகிருேம் என்று.

ஷா :—(கோபமாக) ஆ! என்ன சொன்னுய்? சிறைப் படுத்தப்பட்டும் சீர்பெறவில்லை. அடிமைப்பட்டும் ஆணவம் குறையவில்லை. தரணிசிங்! துச்சமென மதித்து, துடுக்குத்தனமாகப் பேசிய உன் நாவை அறுத்தெறியவேண்டும்.

தர :—பதருதே. பாதுஷாவே! பதருதே! உன் பத்தாம் பசலித்தனம் என்முன்னே பலிக்காது. நேருக்குநேர் நின்று போர் புரியக்கூடியவர்களின் வமிசத்திலே வந்தவன் நான். வீரர்கள் பலர் வாழ்ந்த நாட்டிலே வாழ்ந்தவன். வீரர்கள் பலரை வீழ்த்தியவன். விருதுகள் பல பெற்றவன் நான் என்பதை எடுத்தியம்புகிறேன். நீ என்னதான் உருட்டினுலும் அவை அனைத்தும், என் வீரத்தின் முன்னே பஞ்சாய்ப் பறந்துவிடும் என்பதை உன் மனதிலே பசுமரத்தாணிபோன்று பதிய வைத்துக்கொள்.

ஷா :-ஓநாயின் முன்னே ஆட்டின் ஓலம்! சிங்கத்தின் எதிரே பசுவின் பாய்ச்சல்! தரணிசிங்! சிறையில் அடைபட்டும் உன் கொட்டம் அடங்கவில்லை. என் குதிரையின் முன்னே குப்புற விழுந்தவன் நீ என்பதை மறந்துவிடாதே. என் அசுவத்தை அடக்க அவனியில் ஆள்கிடையாது. எனவே உனக்கும் விடுதலை கிடையாது.

தர:—விடுதலை கிடையாது! (சிரிப்பு) எனக்கு விடுதலை கிடையாது! (சிரிப்பு) (பின்கோபமாக) என் மகன் வருவான். எனக்கு விடுதலை வாங்கித் தருவான். அவனி அறிய அடக்குவான் உனது அசுவத்தின் அட்டகாசச் செயல்களை. ஒடுக்குவான் உனது அடங்காப்பிடாரித் தன்மையை!

ஷா :—உன் மகன் (சிரிப்பு) அடக்குவான் என் அசுவத்தை! (சிரிப்பு) ஒடுக்குவான் எனது அடங்காப்பிடாரித் தன்மையை! உன் மகன். தரணிசிங்! உன் மகன்? (சிரிப்பு) மன்னுதி மன்னர்களாலும் அடக்கமுடியாத அசுவத்தை உன் மகன் அடக்குவான். (கோபமாக) பொடிப்பயல்! பொல்லாத நினைப்பு தரணிசிங்! பொல்லாத நினைப்பு! வரட்டும் உன் மகன். அவனையும் பிடித்து

இதே சிறையில் அடைத்து, என் கண்குளிர உங்கள் இருவரையும் சித்ரவதை செய்கிறேன்! (பின் காவலாளிகளை) ஏய்! யாரங்கே?

(காவலாளிகள் மாறனும் வீரனும் வந்தவாறே)

மா. வீ :—மகாராஜ்!

ஷா :—காவல் கடுமையாக இருக்கட்டும்.

மா. வீ :—உத்தரவு மகராஜ். (பாதுஷா ஷாஆலம் சென்று விடுகிறார்! பின் மாறனும், விரனும் செஞ்சிநாட்டு மன்னர் தரணி சிங் சிறைபட்ட செய்தியை பாடல் மூலம் பாடுகின்றனர்.)

காட்சி 8

இடம் :—டெல்லியின் எல்லை

காலம் :—மாலை வேலை

உறும்பினர் :—மகமத், தேசிங்கு.

(மகமத்தும், தேசிங்கும் டெல்லியின் எல்லையை அடைந்தவுடன் தேசிங்கு மகமத்தைப் பார்த்து)

தே :—மகமத்! டெல்லியின் எல்லையை அடைந்துவிட்டோம். அரசனைப்பார்த்து, அசுவத்தை அடக்கி, எனதப்பாவை மீட்குமுன், இந்நகரைச் சுற்றிப்பார்த்து வருவோமா?

மக :—பார்த்து வருவோம்! ஆனால் இப்படியேவா!

தே :—இல்லை! உடுப்பு மாற்றி, உருமாறி!

மக :—ஆம்! அதுதான் சரி! வா! போகலாம்!

தே :—சரி! வா! போகலாம் (சென்று விடுகின்றனர்)

காட்சி 9

இடம் :—டெல்லி நகரின் முக்கிய வீதி

காலம் :—அதி காலை

உறுப்பினர்கள் :—மகமத், தேசிங்கு, மாறன், வீரன், மற்றும் ஒருசில காவலாளிகள்.

(தேசிங்கும், மகமத்தும் உடுப்பு மாற்றி, உருமாறி டெல்லியின் முக்கிய வீதிகளின் வழியாக வலம் வருகின்றனர். அங்ஙனம் வருகையில், ஓர் இடத்தில் கீழ்க் கண்டவாறு விளம்பரம் செய்யப்பட்ட விளம்பரப் பலகை ஒன்றைக் காணுகின்றனர்.)

"நீலவேணிப் பரியை அடக்குவோருக்கு தக்கப் பரிசுகள் அளிக்கப்படும்!
அடக்காது, தோற்றுப் போனவரைச் சிறையிலடைக்கப்படும்"
டில்லி பாதுஷா ஷா ஆலம்.

(மேலே குறிப்பிட்ட விளம்பரத்தை இருவரும் பார்த்துக் கொண்டிருக்கையில், அவ்வழியே ஓர் காவலாளி வருகிறான். இவர்கள் இருவரும் இருக்கக்கூடிய நிலையைக் கண்ணுற்ற காவலாளி).

காவலாளி :—ஏய்யா! வச்சகண்ணு வாங்காம இப்படிப் பாக்கிறீங்க!

மக :—உம்! உங்க ராசாகிட்ட இருக்கிற, குதிரையை அடக்கி ஏதாவது சன்மானம் வாங்கலாம்னுதா!

கா :—(ஆச்சரியமாக) அடேயப்பா! மன்னாதி மன்னர்களாலும் அடக்க முடியாத குதிரையை, நீங்களா அடக்கப் போறீங்களா? ஒ! அய்யா! நீங்க வெளியே சுதந்திரமா சுத்தரது உங்களுக்கேப் பிடிக்கலைப்போல இருக்கு!

மக :—ஏய்! என்ன? சொன்னே (என்று கூறி அவனைப் பிடித்து அடிக்கப்போக)

கா :—அய்யா! அய்யா! நா பிள்ளைக் குட்டிக்காரன். என்னை அடிக்காதிங்க. தெரியாம சொல்லிட்டே. என்னை மன்னிச்சி விட்டிடுங்க அய்யா!

தே :—(காவலாளியைப் பார்த்து) முன் பின் தெரியாதவர்களிடம் இனிமே இப்படித் துடுக்குத்தனமா பேசமாட்டியே?

கா :—இல்லிங்க அய்யா! இல்லிங்க. இனிமே இப்படிப் பேசமாட்டேன். (என்று கெஞ்சுகிறான்)

தே :—(மகமத்தைப் பார்த்து) சரி! விட்டு விடு அப்பா!

மக :—டேய்! இனிமே!

கா :—இல்லிங்க! இனிமே இல்லிங்க! (என்று கூற மகமத் காவலாளியைவிட, காவலாளி ஓடிவிடுகிறான். பின் இவர்கள் இருவரும், "பாதுஷாவும் பரியும்" என்ற கருத்தமைந்த பாடலைப் பாடிக் கொண்டே செல்கின்றனர். பாடல் முடியும் சமயம் மாறனும், வீரனும், மற்றும் சிலகாவலாளிகளும் ஓடிவருகின்றனர். அவர்களில் வீரன், அவர்கள் இருவரையும் பார்த்து)

வீரன் :—ஆ! என்ன திமிர் உங்களுக்கு. எமது அரசனைப் பற்றி தூற்றிப்பாட உங்களுக்கு எவ்வளவு ஆண்மை இருத்தல் வேண்டும்!

மாறன் :—(மற்ற காவலாளிகளைப் பார்த்து) உம்! வாருங்கள்! இவர்கள் இருவரையும் பிடித்து நமது அரசன் முன் நிறுத்துவோம். (என்றுகூற காவலாளிகள் அனைவரும் இருவரையும் பிடிக்க நெருங்குகின்றனர். அது சமயம் இரு திறத்தாருக்கும், சண்டை நடக்கிறது. மகமத்தும் தேசிங்கும் ஒருவரை ஒருவர் பிரிகின்றனர். மகமத்தை காவலாளிகள் சிலர் பிடித்து அரண்மனைக்குக் கொண்டு சென்றுவிடுகின்றனர். நண்பனை இழந்த தேசிங்கு, பல திக்குகளிலும் நண்பனைக்காண அலைந்து காணப் பெருமையால், இறுதியாக ஓர் இடத்தில் அமர்கிறான். அதுசமயம் ஓர் பெண்ணின் பாடல் கே[illegible] வரும் திக்கைநோக்கிச் செல்கிறான்.)

(தொடரும்)

———



BUY ALWAYS

OUR
BEST
QUALITY

FINE & DELICIOUS
TO DRINK

COFFEE
RAW, ROAST & GROUND

OUR SCENTED NUTS—A SPECIALITY

Sawmy's Coffee Mfg., Co.,
262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.
PHONE No. 3687.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

777 மார்க்

அசல் ஆப்பீல், திராக்ஷ, மாதுளம், மாம்பழம்,
பழரசங்களினுல் மெஷினில் தயார் செய்த
புரூட் ஸ்குவாஷ் (FRUIT SQUASHS)ம்,
ரெடிமிக்சர் ரவா தோசை பவுடரும்,
அப்பளம், வடாம், எல்லாவகை வற்றல்களும்
எங்களிடத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் & கோ.

ஸ்ரீ ராமபவான் பில்டிங்ஸ்

46, தம்புசெட்டி தெரு :: மதராஸ்-1

Editor, Printer, Publisher: Sri V. M. Natesam, Goodland & Co.,
55, Muthumari Chetty Street, Madras-1,